கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(01.03.2020 - 01 பங்குனி, 2020 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 227, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2020

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05


**திருத்தந்தையின் இம்மாத கருத்து**

சீனாவில் உள்ள திருஅவை ஒற்றுமையில் வளர மன்றாடுவோம்

# துன்பத்தையும் வேதனைகளையும் சந்தோஷமாக தாங்கும் போது இயேசுவை பின்பற்றுபவர்களாக மாறுகின்றோம்.

**இரண்டாம் ஜோன் பவுல் பாப்பரசர் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தபோது ஒருவர், "நீங்கள் நோயினால் அல்லல் பட்டுக்கொண்டிருப்பதால் ஓய்வு பெற்று இளைப்பாறலாமே" என்று கூறினார். அதற்கு பாப்பரசர், கிறிஸ்து எமது பாவங்களுக்காக சிலுவையில் பாடுகள் பட்டதைப்போல் நானும் இந்நோயினால் கிறிஸ்துவோடு சிலுவையின் பாதையில் செல்ல நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது"**

என்று சந்தோசத்துடன் கூறினார்". விபூதிப்புதனன்று பேராயர் இல்ல சிற்றாலயத்தில் திருப்பலியை நிறைவேற்றிய கர்தினால் ஆண்டகை இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் இன்று எம்மில் பலர் மாய வித்தைகள் புரிந்து சுகம்பெற எத்தனிக்கின்றனர். வேதனை துன்பங்களிலிருந்து தப்பி ஓடுவதில் குறியாயிருக்கிறார்கள். பொதுவாகவே நாம், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு நிலைக்கு முகம்கொடுப்பவர்களாகவே இருக்கிறோம். மன சஞ்சலம், நோய், உறவினர்களினால் பிரச்சினைகள், இயற்கையினால் பாதிப்புகள் என்று மாறி மாறி வந்துக்கொண்டே இருக்கும். இதிலிருந்து விலகி ஓடி, இறைவனையும் திட்டி தம்மையும் நொந்துக் கொள்வதினால் இருக்கும் பாதக நிலை கூடுமே தவிர குறையாது. துன்பம் வேதனைகளை அனுபவிக்கும் அளவுக்கே மற்றவர்களின் துன்பத்தின் ஆழத்தை உணர்ந்துக்கொள்ள முடிகிறது. 16வது ஆசீர்வாதப்பர் கூறினார்; துன்பத்தையும் வேதனைகளையும் சந்தோசமாக தாங்கும் அளவுக்கே இயேசுவை பின்பற்றுபவர்களாக மாறுகிறோம். எமது வாழ்வின் நிகழ்வுகளை புதிய விதத்தில் சிந்திக்க நாம் எம்மை பழக்கிக்கொள்ள வேண்டும். உலக



ஆசைகளினால் ஏற்படும் அழிவிலிருந்து மீண்டு, சிலுவையின் பயணத்தில் நாம் பயணிக்க இந்த தபசு காலத்தை பயன்படுத்திக் கொள்வோம்.

## குருத்துவ வாழ்வில் பொன்விழாவைக் கண்ட அருட்தந்தையர்கள்



தமது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களைக் கடந்த அருட்பணி. பிலசிடஸ் த சில்வா அடிகள், அருட்பணி ஹென்றி சில்வா அடிகளார், அருட்பணி றீட் செல்டன் ப்ரனாந்து அடிகளார் ஆகியோரின் குருத்துவ வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறும்விசேட திவ்விய திருப்பலி கொழும்பு பேராயர் இல்லத்தின் திரு இருதய நாதர் சிற்றாலயத்தில் நடைபெற்றது. பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து துணை ஆயர்களான மேதகு.ஜே. டீ. அந்தனி ஆண்டகை, மேதகு.மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை உட்பட மறைமாவட்ட அருட்பணியாளர்கள் கலந்து சிறப்பித்தனர். பேராயர், துணை ஆயர்களுடன் பொன்விழா காணும் அருட்தந்தையர்களையும் படத்தில் காணலாம்.

தகவல் : T. சுனில்

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி



கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகின்றோம். (2 கொரி 5:20) என்ற புனித பவுலின் வார்த்தையை மையமாகக் கொண்டு இவ்வாண்டின் தவக்கால செய்தியை தருகிறார். இச்செய்தியை நான்கு உபதலைப்புகளுடன் தருகின்றார்.

**மனமாற்றம்**

**செபத்தின் முக்கியத்துவம்**

**தன் குழந்தைகளுடன் உரையாடுவது இறைவனின் பேரார்வம்**

**மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்**

என்ற நான்கு தலைப்பின் கீழ் திருத்தந்தை தனது தவக்காலச் செய்தியை வெளியிட்டுள்ளார். இவை பற்றிய விபரத்தை நான்காம் பக்கத்தில் காணலாம்.

## தேசிய மறைக்கல்வி நடுநிலையத்திலிருந்து....

**2020 மறையாசிரியர் இடைநிலை இறுதி தேர்வுகளுக்குத் தோற்ற இருப்போருக்கு...**

மேற்படி தேர்வுகள் இவ் வருடம் புரட்டாதி மாதம் 26ம் திகதி நடைப்பெற உள்ளன. தேர்வுகளுக்குத் தோற்ற இருப்போர் அவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை உங்கள் பங்கு தந்தை மூலம் உங்கள் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தேர்வுகளுக்கு விண்ணப்பிப்போர், நிரப்பப்பட்ட உங்களின் விண்ணப்பப் படிவங்களை 2020, ஆடி மாதம் 01ம் திகதிக்கு முன்னர் உங்களின் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர்களுக்கு பங்கு தந்தை மூலம் கட்டாயமாக அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தொடர்ச்சி 14ம் பக்கம்..

**கொழும்பு உயர்மறைமாவட்ட சிறுவர் தினம் – 2020**

கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினமானது இவ்வருடம் பங்குனி மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தேவத்தை இலங்கை இராக்கினி அன்னை பசிலிக்காவில் நடைபெறும்.

## உலகின் முதல் தமிழ் புனிதர்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முத்திப்பேறுபெற்ற தேவசகாயம் பிள்ளையை 21.02.2020 புனித நிலைக்கு உயர்த்த அங்கீகாரம் அளித்துள்ளார். இவர் இந்தியா தமிழ் நாட்டில் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்து குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ மதத்தை தழுவினார். பின் மீண்டும் கிறிஸ்துவுக்காக தனது உயிரையே கொடுத்து மறைசாட்சியாக இறந்தார். இவர் முதல் உலக தமிழ் புனிதர் என்ற பெயரைப் பெறுகின்றார்.



**ஆண்டவரே, இரக்கமாயிரும், ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம். (தி.பா 51)**

# பாஸ்கு குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஒருவருடத்தைக் கடக்கின்ற போதிலும் அதைப் பற்றிய எவ்வித விசாரணைகளும் செய்ய வில்லை.

**பாஸ்கு குண்டுத்தாக்குதலின் ஒருவருடம் பூர்த்தியை முன்னிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பேராயர்.**

குண்டுத் தாக்குதலை நடத்தியது யார்? அதற்காக செலவு செய்தது யார்? இதன் பின்னணியில் அரசியல் சக்திகள் உள்ளனவா? என்ன காரணத்திற்காக இத்தாக்குதல் நடத்தப்பட்டது? போன்ற கேள்விகளுக்கான உண்மைகளை நாம் அறிய வேண்டும். எமது அப்பாவி மக்களை கொலை செய்து ஒருவருடம் கடந்தும், எதுவுமே நடக்காதது போல் முகத்தைத் திருப்பிக் கொள்ள நாம் தயாரில்லை. கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதி. மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த செவ்வாய் கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்...



தொடர்ச்சி 15ம் பக்கம்..

## சிறப்பு அறிவிப்பு

சிலாப மறைமாவட்டத்திற்குரிய கோனாவில பங்கில் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஹெலேனா இறை சேவகி அவர்களை புனிதத்துவத்திற்கு மேன்மைப்படுத்துகின்ற பணியின் "மறைமாவட்ட வினவல்" (Diocesan Inquiary) எனும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இறை சேவகி ஹெலேனா அவர்கள் பற்றிய அல்லது அவரது செப வேண்டுதல் மூலம் நிறைவேறியது என விசுவசிக்கின்ற சில விடயங்கள் இருப்பின், இது பற்றி சிலாப மறைமாவட்ட அதிவண். குருமுதல்வர் அல்லது இதுபற்றி முதல் காப்பாளராக (Postvlator) நியமிக்கப்பட்டுள்ள அதிவண. விமல் திரிமான்ன அருட்தந்தையை அணுகும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**அதிவண. குருமுதல்வர்**
**மறை ஆயர் இல்லம், சிலாபம்.**

**வண. விமல்திரிமான்ன அடிகள்**
**இல 80, அம்பிட்டிய வீதி, கண்டி**

**ஆயர் தேமகு. வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை.**

## பதுளை மறைமாவட்ட ஓய்வு பெற்ற குருமுதல்வர்
## அருட்தந்தை ஒகஸ்டின் பெர்னாண்டோ



**பிறப்பு :**
**1932.09.22**
**இறப்பு:**
**2020.01.29**
**குருப்பட்டம்**
**29.06.1963**

எமது பதுளை மறைமாவட்டத்தில் அயராது பணி சேவை செய்து, ஆன்மீக வழியில் எம்மை வழிநடத்த ஆற்றிய சேவையை நினைவுகூறுகின்றோம். கஷ்ட பிரதேசங்களின் மக்களை வழிநடத்தி மழைய மண்ணில் மணியாக ஏழை எளியோரை இறை வாழ்வில் இறை அன்பையும், இறை வார்த்தையும் பகிர்ந்து எம்மை வழிநடத்தியது மட்டுமின்றி சகல குரவர்களையும் ஆன்மீக வழியில் வழிகாட்டியாக திகழ்ந்த இவ்வடியாரை எமது பதுளை மறைமாவட்ட மக்கள் அனைவரும் இறுதி அஞ்சலி செய்து கூட்டு பிரார்த்தனை திருப்பலியை எமது ஆயர் அதிமேதகு. வின்சன் பெர்னாண்டோ S.S.S ஆண்டகையும் ஏனைய மறைமாவட்ட குருக்களும் பலியை நிறைவுசெய்து அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடி இறை மக்கள் அனைவரும் இறுதி சடங்கிலும் பங்கெடுத்து நன்றி தெரிவித்தனர்.

**மண்ணில் வாழ்ந்து செல்லும் குருவே!**
**விண்ணில் இறைவன் இன்பம் தருவார்**
**அன்று உன்னை படைத்த இறைவன் - இன்று**
**உன்னை அன்போடு அழைத்தார்.**

**தகவல் : திரேசா செபஸ்டியன், பதுளை**

## ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.

பாஸ்கு ஞாயிறன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நடத்தப்பட்ட கொடூர குண்டுத்தாக்குதலினால் இன்றுவரை பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என பலரும் அனுபவித்துக்கொண்டிருக்கும் இன்னல்களுக்கான இன்னுமொரு பகிரங்கச் சாட்சி கடந்த ஜனவரி மாதம் 29ம் திகதி இடம்பெற்றது.

நேரின் புளோரிட் வயது 26 இளம் பெண் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர். கொழும்பில் தங்கி தொழில் பார்த்து வந்தவர். பாஸ்கு ஞாயிறு அன்று ஆலயத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். முகம், உடல் எரிந்து, கால் உடைந்து சொல்லொணாத் துயருற்றார். பாதிக்கப்பட்ட நாள் தொடக்கம் கொழும்பு உயர்மறைமாவட்டத்திற்குரிய செத்சரண நிறுவனம் இவருக்கான செலவுகளை பொறுப்பேற்று சிகிச்சை அளித்து வந்தது. செத்சரண நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி லோறன்ஸ் ராமநாயக்க அடிகளார், அருட்பணி சுமுது பத்தும் அடிகள், அருட்சகோதரி. ரஞ்சனி கிரகரி ஆகியோர் இவரின் உறவினர் ஒருவர் மூலமாக இவரை பராமரித்து வந்தனர். 9 மாதங்களாக பல துன்பங்களை அனுபவித்து தை 29ம் திகதி றாகமை வைத்தியசாலையில் தனது துன்பங்களுக்கான முடிவை அடைந்து இறைவனடி சேர்ந்தார். இவர் இறந்த பின்பு இவரின் இறுதிக் கிரிகைக்காக செத்சரண நிறுவனத்தின் இயக்குனரால் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, யாழ்ப்பாணம் கரிட்டாஸ் நிறுவனம் பொறுப்பேற்று இறுதிக்கிரிகைகளை நடத்தியது. இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக நாமும் இறைவனை மன்றாடுவோம்.

## "கிறிஸ்தவ அர்ப்பணிப்பு என்பது எமது சுயவிருப்பத்தில் இருந்து உருவாக வேண்டும்"



எங்கள் கிறிஸ்தவ அர்ப்பணிப்பு என்பது சந்தைக்குச் சென்று வாங்குதற்க்கு ஒரு பொருளல்ல மாறாக, அது எங்கள் சுயவிருப்பத்திலிருந்து உருவாகும் ஒன்று. எங்கள் நோய்கள், கவலைகள் மற்றும் துன்பங்கள் எல்லாம் கடவுளை சோதிப்பதற்காக அல்ல, ஏனெனில் கடவுள் ஒரு மாய மருத்துவரோ அல்லது சாஸ்திரம் சொல்லுபவரோ அல்ல. மாறாக, கடவுள் எங்கள் தந்தை, அவர் எமது சாதாரண தேவைகளையும் கூட தருகின்றார்.

நமது எல்லா துன்பங்களையும், கவலைகளையும் விசுவாசக் கண்களால் காணவேண்டும். எமக்கு வருகிற நமது நோய்கள் மற்றும் துன்பங்கள் கூட அவரது சிலுவை அன்பில் நிலைத்திருக்க எமக்கு அருளப்படும் ஒன்றாகும். அதேவேளை விசுவாசம் என்பதும் உரத்த குரல்களினால் எமக்கு தேவையானவைகளை கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்வது அல்ல என தமது மந்தைக்கு வெளியிட்ட செய்தியில் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

**ஆண்டவருக்குள் எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே,**

நான் ஏன் இதை உங்களுக்கு எழுதுகின்றேன் என்றால், இன்றைய காலகட்டத்தில் கிறிஸ்துவால் அனுப்பப்பட்டதாக கூறும் சிலர் சுய இறைவாக்கோடு குணப்படுத்துபவர்களாக, மாயவித்தை செய்பவர்களாக நம் முன் தோன்றியுள்ளார்கள். இதனை நாம் கிறிஸ்துவின் ஒளியிலே ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் உண்மையை புறக்கணிக்க யாராலும் முடியாது. தங்கள் மகிமைக்காகவும் மற்றும் பணத்திற்காகவும் கிறிஸ்தவ சீடத்துவத்தை ஒரு மாய வித்தையாக காட்ட முயல்கின்றார்கள்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமது போதனைகளில், இறுதிக்காலத்தில் நிகழப்போகும் விடயங்கள் குறித்து பேசும்பொழுது இவ்வாறானதொரு சோதனையை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக கூறியுள்ளார். "உங்களை யாரும் நெறிதவறச் செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக் கொண்டு வந்து, "நானே மெசியா" என்று சொல்லிப் பலரை நெறி தவறச் செய்வர்" (மத் 24:4-5) பல போலி இறைவாக்கினர் தோன்றிப் பலரை நெறி அலையச் செய்வர். (மத் 24:11) "ஆனால் இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்" (மத் 24:13) அதே வேளை இறைவார்த்தைகளை அவர் உறுதிப்படுத்த பின்வருமாறும் கூறியுள்ளார். "விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும், ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா" (மத் 13:31).

இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கும் போது உண்மையாக இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் சீடர்களுக்கு இவ்வாறானதொரு சோதனை, தவறான வழியில் போதிப்பவர்களிடமிருந்து வரும் என்பது உறுதியாகின்றது. இவ்வாறானதொரு சோதனையிலிருந்து நாம் விடுபட இவைகளை கவனித்து இவற்றிற்காக செபிக்க வேண்டும் என இயேசு கிறிஸ்து அழைப்பு விடுகின்றார். (மாற் 14:38). சீடர்களாய் வாழ்வது சுலபமானது என இதனால் தான் இயேசுகிறிஸ்து சொல்லவில்லை. ஆனால், நாங்கள் அனைவரும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார். சுயமறுப்போடு, சிலுவை வழியில் நாம் அவரைப் பின்பற்ற வேண்டும். "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மாற் 8:34). எனவேதான் தூய பவுல் அவரது அழைப்பை கிறிஸ்து மீது வைப்பதாக கூறுகின்றார்.

எனவே, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, அடிப்படையில் கிறிஸ்துவின் சீடத்துவம் என்பது, இயேசு கிறிஸ்துவை தூய்மையான வழியில், சுயநல துறப்பில் மற்றும் சித்தம் என்னும் சிலுவையைத் தூக்கிக் கொண்டு வாழ்வதாகும். அவர் சீடர்களை "என்னைப் பின்செல்" (மாற் 1:17) என அழைத்தமை கஷ்டமான மற்றும் குறுகியதொரு பாதையில் மீட்பை நோக்கிச் செல்லவே ஆகும். மற்றும் ஒரு வகையில் சீடத்துவம் என்பது, இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலாகும். "நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என ̇கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்" (யோவா 14:15) "என்னை நோக்கி, ஆண்டவரே ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை, மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின் படி செயல்படுபவரே செல்வர். அந்நாளில் பலர் என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா?, உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா? என்பர். அதற்கு நான் அவர்களிடம், "உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" என வெளிப்படையாக அறிவிப்பேன்" (மத் 7:21-23) எனவே, தூய்மையான வாழ்வும் கீழ்ப்படிதலான வாழ்வுமே சீடத்துவத்தைப் பூரணப்படுத்துகின்றது.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கொரோனா என்ற கோவிட்19 வைரஸ் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இறைவேண்டல்

வைரஸ் அனர்த்தங்களிலிருந்து மக்களை முழுமையாக காப்பாற்ற இறைஆசி வேண்டிய பிரார்த்தனைகளுடன் திருப்பலி பூசை மற்றும் திவ்விய நற்கருணை ஆராதனை வரும் மார்ச் முதலாம் திகதி றுவன்வெல்ல புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 6.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறும்.

திருப்பலி பூசை இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிவண கலாநிதி கிலிட்டஸ் சந்திரசிரி பெரேரா தலைமையில் ,பங்கு தந்தை அருட்திரு. கிலிபட் சேவின் பெர்னாண்டஸ் இருவரும் இனைந்து நடத்துவார்கள். அத்தோடு தவக்காலங்களில் நடைபெறும் வழிபாடுகளில் விசேட விதமாக இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் ஏனைய மக்களை ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றுமாறும் இவ்வழிபாடுகளில் மன்றாடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**எஸ் பி அந்தோனிமுத்து, இனைப்பாளர்**
**மரியாயின் சேனை கியூரியா**
**கேகாலை மாவட்டம்**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
01 பங்குனி, 2020 ஞாயிற்றுக்கிழமை.

# பாவியை அல்ல, பாவத்தை வெறுக்கின்றவர் நம் இறைவன்

வருந்தி திருந்தி இயேசுவிடம் வர அழைக்கின்றது இத்தவக்காலம். தவக்காலம் ஆரம்பமாகியுள்ள இவ்வேளையிலே நாம் எவ்வாறு இந்த நாற்பது நாட்களையும் செலவழிக்க வேண்டும் என்பதை சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

தவக்காலம் என்பது உடையை கிழிக்க அல்ல, உள்ளத்தை கிழிக்க. உடலை வருத்த அல்ல, உள்ளத்தை திருத்த. இது தள்ளுபடியின் காலம். இறைவனுக்கு எதிராக நாம் செய்த பாவங்களை, இறைவன் தன் இரக்கத்தை வெளிப்படுத்தி தள்ளுபடி செய்து நம்மை இருகரம் விரித்து ஏற்றுக்கொள்ளும் காலம்.

பாவியை அல்ல. பாவத்தை வெறுத்து, அந்த பாவியை அரவணைக்கும் அருளின் காலம். எனவே தவத்துக்கு இது ஏற்ற காலம். நாம், நம் வழிமுறைகளை, வாழ்வு முறைகளை, எண்ணங்களை, சிந்தனைகளை மதிப்பீடு செய்து நம் தவறுகளுக்காகவும் அநீத செயல்களுக்காகவும் வருந்தி அதிலிருந்து திருந்தி இயேசுவை நோக்கி நடைபோட இந்த காலம் நம்மை அழைக்கிறது.

தரையில் தூங்குபவன் தவறி விழுவதில்லை. நாம், நம் வாழ்க்கையில் ஒரே சமநிலையில் வாழ்ந்தால் தவறி விழமாட்டோம். நம் வாழ்வில் ஏற்ற, இறக்கங்கள் உண்டு. எனவே தான் நாம் தவறுகிறோம். தவறுவது மனித இயல்பு. ஆனால் அந்த தவறு என்னவென்பதே அறியாமல் இருப்பதும், அறிந்தாலும் அதை ஏற்காமல் இருப்பதும், வருந்தி திருந்தாமல் இருப்பதும், இறைவனிடமிருந்து நம்மை வெகுதூரமாய் தள்ளி வைத்துவிடும். வருந்துவதும், திருந்துவதும் நம் வாழ்வின் வழிமுறையாக மாற வேண்டும்.

நம் வாழ்வில் நாம் யூதாசுகளாக வாழ்கிறோமா? அல்லது பேதுருவாக வாழ்கிறோமா? என்று சிந்தித்து பார்க்க இந்த தவக்காலத்தில் அழைக்கப்படுகிறோம். யூதாசு தான் செய்த தவறு குறித்து வருந்தினான். ஆனால் திருந்தி இயேசுவிடம் வரவில்லை. புதிய வாழ்வை பெறவில்லை. பேதுருவோ வருந்தினார். திருந்தினார். இயேசுவிடம் வந்தார். மனம் திரும்பினார். இன்று அவர் புதிய வாழ்வைப் பெற்று புனிதராக வாழ்கிறார்.

எனவே, கடவுள் நம் பாவங்களுக்கேற்ப தண்டனை கொடுப்பதை அவர் விரும்பவில்லை. பாவிகள் சாக வேண்டும் என்பது அவரது விருப்பம் அல்ல. கடவுள், தாம் செய்ய நினைத்த தீங்கு குறித்து மனம் மாறுகிறவர். கடவுள் நமக்கு தண்டனை வழங்க அல்ல. மாறாக, வாழ்வை வழங்கவே தன் ஒரே மகனை அனுப்பினார். எனவே வருந்துவோம். நம் வாழ்வெல்லாம் வசந்தமாகட்டும்.

“சேவை, தியாகம் ஆகியவற்றின் உயிருள்ள உருவமாகப் பெண் இனத்தைப் பார்க்கின்றேன்”. - என்ற மகாத்மா காந்தி கருத்துக்கேற்ப இம்மாதம் 8ம் திகதி உலக மகளீர் தினத்தைக் கொண்டாடும் அனைத்து மகளீருக்கும் எனது வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

இறையாசீருடன்
ஆசிரியர்



# மனிதா! நீ எங்கே இருக்கிறாய்?

மனிதனின் முயற்சிகளின் வழியில் தான் இறைவனின் அருள் வழங்கப்படுகிறது. சோம்பேறிகளின் வாசலில் இறையருள் பொழியப்படுவதில்லை. இறைவனின்மீது அன்பு கொள்கின்ற யாவரையும் அவர் அரவணைத்து கொள்கிறார். அவர் யாரையும் கைவிடுவதில்லை. யார், எந்த இனமாய், தேசமாய் இருந்தாலும் அரவணைக்கிறார்.

செபம், நோன்பு உள்ளிட்ட வணக்கங்களை நிறைவேற்றுமாறு இறைவன் கேட்பது அவருக்கு அது தேவை என்பதற்காக அல்ல, ஆனால், அதை நிறைவேற்றுவதால் மனிதனுக்கு கிடைக்கும் நன்மைக்காகவே.

சுயநலத்தின் சொர்க்கமாக தருகிறது இன்றைய உலகம். கடமையைவிட, அன்பைவிட, தாழ்ச்சியைவிட, கயமைத்தனமும், ஆணவமும், உலோபித்தனமும், போசனப்பிரியமும் வலுவடைந்து நெஞ்சில் ஈட்டி என ஊடுருவுகின்றன. ஆதாயம் தேடி பணத்தாசை பிடித்து பல வழிகளை குறுக்காக அமைத்து வேலிதாண்டி மேய்கிறார்கள்.

“கர்வம் வானதூதர்களை பேய்களாக்கும் தாழ்ச்சி மனிதர்களை வானதூ-தர்களாக்கும்!” என்கிறார் புனித அகுஸ்தினார். விவிலிய விளக்கின் வெளிச்சத்தில்தான் நம் பாதங்கள் நடக்கவேண்டும். செபமாலை ஒன்றே சாத்தானின் தீச்செயல்களை விரட்டி அடிக்கும் அக்கினி வாள்.

நீ நல்லது செய்யாவிட்டால் பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆளவேண்டும் என்று தொடக்க நூல் 4:7இல் தெளிவுபடுத்துகிறார் நம் ஆண்டவர். நம் பாவத்தால் தொடர்ந்து பல விதங்களில் முன்னேறி ஆண்டவருக்கு ஹலோ சொல்லி ஆன்ராய்டு போனில் அவரோடு செல்பி எடுத்துச் செல்கிறோம்.

தொடக்க நூலில் காயின் தன் தம்பிக்கு நான் என்ன காவலாளியா? என



அன்றே ஆண்டவரிடம் எதிர்த்துப் பேச ஆரம்பித்துவிட்டான். ஆனால் அதையே இன்று கொஞ்சம் நாகரீகமாக “காம்பர்மைஸ்” எனத் திரித்துக் கொண்டிருக்கிறோம். பத்து செபமாலையில் மணி சொன்னால் போதும். தவக்காலத்தில் ஒரு ஞாயிறு திருப்பலிதானே கலந்துகொள்ளவில்லை என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் ஊனமுற்ற ஆறுதல்கள்!

பக்தி உள்ளவர்களாக இருக்க நிறைய பேர் விரும்புகிறார்கள். ஆனால், பணிவுள்ளவர்களாக இருக்க யாரும் விரும்புவதில்லை என்கிறார் ஆங்கிலக் கவிஞன் ஜோசப் எடிசன்.


மனம் மாறாது நமக்கு மகிழ்வில்லை. மன்னிக்கத் தெரியாதவன் மனிதனும் இல்லை, மனுமகனை மறந்தவனுக்கு மீட்பே இல்லை. எனவே, இறை பிரவேசத்தில் நுழைவோம்.

கடவுள் மனித இனத்தின்மீது கொண்டுள்ள உறவு படைப்பில் இருந்தே தொடங்குகிறது. தோற்றத்தில் இருந்தே இணைத்தும் காட்டுகிறது. ஆனால் மனிதன் பாவத்தின் மூலம் இவ்வுறவை முறித்து துன்பத்திற்கும், சாவுக்கும் தன்னையே உள்ளாக்கிக் கொள்கிறான். இருப்பினும் கடவுள் மனிதன்மேல் தொடர்ந்து கனிவு காட்டுகிறார்.

அனைத்து மானிடரையும் மீட்குமாறு கடவுள் ஆபிரகாமை தேர்ந்தெடுத்தார். நாமும் நம்மை மீட்க நல்லதொரு ஆபிரகாமை தேடுவோமா? அல்லது கேட்போமா? அல்லது நாமே ஆபிரகாமாவோமா? “மனிதா, நீ எங்கே இருக்கிறாய்?” என ஆண்டவர் கேட்டால் ஓடி ஒளியாமல், “இதோ நான் இருக்கிறேன் என் மீட்பரே” என ஒளியின் மக்களாக ஆண்டவருக்கு சாட்சியுள்ள மக்களாக இருப்போமா? சிந்தித்து பாஸ்கா உயிர்ப்பு விழாவுக்கு ஆயத்தமாவோம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# விண்ணரசு!



தர்மம் செய்யும்போதும், இறைவேண்டுதல் செய்யும் போதும், நோன்பிருக்கும்போதும் வெளிவேடக்காரர்கள் போல் இருக்க வேண்டாம் என போதித்த நம் இயேசு, தர்மம் செய்ய வேண்டும் என்றும் தர்மம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன என்பதையும், ஏழ்மையைப் பற்றிய அச்சம், தர்மம் செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடாது எனவும் போதிக்கிறார். மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும் என்கிறார். உலகச் செல்வத்துக்குப் பாதுகாப்பில்லை. விண்ணுலக செல்வத்தால் நமக்கு அனுகூலம் உண்டு. தர்மம் செய்வதால் செல்வம் கரைந்து விடும் என்று எண்ணக்கூடாது. மாறாக தர்மம் செய்வதால் நம் செல்வம் அதிகரிக்கத்தான் செய்யும். எப்படி? விண்ணுலகில் செல்வம் நமக்கு சேர்த்துவைக்கப்படும். தர்மம் செய்யவில்லை என்றால் அந்தச் செல்வம் உலகில் அழிந்துவிடும்.

மற்றவர்களுக்கு செல்வத்தை உலகில் விட்டு செல்லுங்கள் என இயேசு சொல்ல வில்லை. உலோகங்களைத் துரு அழித்துவிடும். துணிகளை பூச்சி அரித்துவிடும். துருப்பிடிக்காத, பூச்சி அரிக்காத அணிகலன்களில் பதிக்கப்படும் விலை உயர்ந்த கற்கள்போன்ற மற்ற செல்வங்களும் உண்டு.. அவை திருடரால் கன்னமிட்டுத் திருடப்படும் என்று இயேசுப் போதிக்கிறார். செல்வர் அனைத்து வசதியுடன் வாழ்வதால் செல்வம் மறைந்துவிடலாம். அல்லது நண்பர், உறவினர், விருந்தினரால் ஏமாற்றப்பட்டு சட்ட விரோதமான முறைகளில் செல்வத்தை இழக்க நேரிடலாம். தவறாக பதுக்கிவைக்கப்படும் செல்வத்தை உண்மையில் நாம் இழக்கவில்லை என்றாலும் ஆன்மீக ரீதியாகப் பார்த்தால் அதை இழந்து விட்டோம். ஏனெனில் அது நமக்கு மீட்புப் பெற்றுத்தரப் போவதில்லை. உருவகமாக துரு நமக்குள் உள்ள அகம்பாவத்தைக் குறிக்கிறது. தூய நெறியின் பிரகாசத்தை மறைக்கிறது. உருவகமாகப் பூச்சி நமக்குள் உள்ள பொறாமையைக் குறிக்கிறது. பொறாமை நம் நல்ல எண்ணத்தை அரித்து ஒற்றுமையின் பிணைப்பை சீர்குலைக்கிறது. தீயசக்திகள், மறை எதிர்க் கொள்கைகளைப் பரப்புபவர் மானிடரிடமிருந்து ஆன்மீக செல்வத்தைக் கொள்ளை அடிப்பவரும் திருடர்தான். ஆனால் விண்ணுலகில் செல்வம் சேர்த்தால் அதை பூச்சியோ திருடரோ அழிப்பதில்லை. திருடரும் கண்ணமிட்டுத் திருட முடியாது. விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது. (திப. 115:16) விண்ணகம் என்றென்றும் நிலைத்திருக்கும். எது சிறந்தது? பாதுகாப்பு நிச்சயமில்லாத உலகில் செல்வத்தை வைத்திருப்பதா? பாதுகாப்பு இருக்கும் விண்ணுலகில் செல்வத்தை வைத்திருப்பதா?

விரைவில் உலகை விட்டுசெல்ல இருக்கும் நாம் நம் செல்வத்தை நாம் செல்லும் இடத்திற்கு அனுப்பாமல் உலகிலேயே விட்டு செல்வது எவ்வளவு முட்டாள்தனம்? ஆகையால் நம் செல்வத்தை நம் தாயகம் விண்ணகத்தில் தான் சேர்க்க வேண்டும். பூச்சி அரிப்பதாலலோ துருப்பிடிப்பதாலோ திருடர் கன்னமிட்டு திருடுவதாலோ எல்லா செல்வத்தையும் நாம் இழக்கப்போவதில்லை. ஆகையால் தான் நம் இயேசு **உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்** என்கிறார். நம் பற்றுசெல்வத்தை சார்ந்தது என்றால் அதற்கு நாம் அடிமையாகி விண்ணகத்துக்குரிய எதையும் எண்ணாமல் விண்ணகத்தை நாம் இழந்து விடுவோம். பெருந்தீனி, இச்சைக்குரிய பிணைப்புடன் வாழ்பவன் உள்ளம் அவனுடைய செல்வத்தில்தான் இருக்கும். மண்ணுலகில் செல்வம் சேர்ப்பவர் விண்ணகத்தை நோக்கி ஏன் பார்க்க வேண்டும்? அங்கு அவர்கள் ஒன்றும் சேர்தது வைக்கவில்லையே. அதனால் தான் இயேசு தர்மம் செய்வதில் உள்ள நன்மையைப் போதிக்கிறார்.

தர்மம் செய்யும்போது தம்பட்டம் அடிக்கக்கூடாது. வெளிவேடக்காரர் போல் மக்கள் புகழ செய்யற்படுவோர் கைமாறுப் பெற்றுவிட்டனர். தர்மம் செய்யும்போது வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியக்கூடாது. தர்மம் செய்வது மிகவும் இரகசியமாக இருக்க வேண்டும். அப்போது நாம் செய்யும் தர்மத்திற்கு பலன் கிடைக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் நம் விண்ணகத் தந்தையும் நமக்குக் கைமாறு அளிப்பார். நாம் தர்மம் செய்வதை யாராவது பார்க்க வேண்டும் என விரும்பினால் விண்ணையும் மண்ணையும் படைத்த இறைவன் தலைமைத் தூதர்கள், வானத்தூதர்கள், புனிதர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**எனவே இத்தவக்காலத்தில் தர்மம் செய்து**

**விண்ணகத்தில் செல்வங்களை**

**சேர்த்து வைப்போம்**

# திருத்தந்தையின் தவக்காலச் செய்தி



**சிலுவையில் தொங்கும் இயேசுவின் விரிந்த கரங்களில் பார்வையை செலுத்தி நாம் மீட்கப்பட அனுமதிப்போம்**

**“கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்”** (2 கொரி.5:20), என்ற புனித பவுலின் வார்த்தைகளை தலைப்பாகக்கொண்டு இவ்வாண்டின் தவக்காலச் செய்தியை வெளியிட்டு-ள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். நான்கு உபதலைப்-புக்களுடன் தன் செய்தியை இத்திங்களன்று வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், **“மனமாற்றத்தின் அடிப்படையாக பாஸ்கா மறையுண்மை”** என்ற தலைப்பின் கீழ், சிலுவையில் தொங்கும் இயேசுவின் விரிந்த கரங்களில் பார்வையை செலுத்தி, நாம் மீட்கப்பட அனுமதிப்போம் எனவும், ஒப்புரவு அருளடையாளத்தில் நம்பிக்கைக்கொண்டு, நம் குற்ற உணர்வுகளிலிருந்து விடுதலைபெறுவோம் எனவும், அதில் விண்ணப்பித்துள்ளார்.

தவக்காலத்தில், செபத்தின் முக்கியத்துவம் குறித்து, **“மனமாற்றத்தின் அவசரம்”** என்ற இரண்டாவது உப தலைப்பின் கீழும், **தன் குழந்தைகளுடன் உரையாடலை மேற்கொள்ளும் இறைவனின் பேரார்வ விருப்பம்** குறித்து மூன்றாவது தலைப்பின் கீழும், விவரித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

பாஸ்கா மறையுண்மையை நம் வாழ்வின் மையமாக வைப்பது என்பது, இயேசுவின் காயங்களின் வழி நாம் காணும் மக்களின் துன்பங்கள் குறித்து இரக்கம் கொள்கிறோம் என்பதையும் குறித்து நிற்கிறது என, **“நமக்கென வைத்திருப்பதற்கல்ல, மாறாக, மற்றவர்களுடன் பகிர்வதற்குரிய செல்வம் இது“** என்ற நான்காவது பகுதியிலும் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# இளைஞரே! ஆண்டவர் உங்களை தம் தனிச்சொத்தாகத் தேர்ந்துக் கொண்டார் (இசை 14:2)



அருட் சகோ. செ. தொபியாஸ் CMSF. சிலாபம்.

**எனவே.... இளைஞர் வாழ்வில்**

**பொறுமை தேவை!**

ஆற்றங் கரையில் இருந்து ஒரு முதியவர் மீன் பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு இளைஞன் அவரையே நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இளைஞரைப் பார்த்து, அந்த முதியவர் **நண்பா, என்னையே பார்த்துக் கொண்டிருப்பதற்கு பதில் நீயும் மீன் பிடித்தால் என்ன?** என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன், ‘உங்களைப் போல் எனக்குப் பொறுமை இல்லை” என்றான். எல்லா மக்களும் பொறுமையைப் பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள். ‘பொறுத் தார் பூமியாள்வார்” என்று. ஆனால் சிலர்தான் அதை பயிற்சி செய்கின்றனர். இப்போது வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தில் பொறுமையாக காத்திருப்பது என்பதை இளைஞர்களுக்கு விளக்குவது மிகவும் கடினம். நம் கடவுள் சுட்டெரிக்கும் கோடை முடிந்தவுடன் அடை மழையைக் கொடுத்து ஆசீர்வதிக்கின்றார். கோடையில் நாம் மழைக்காக பொறுமையாக காத்திருக்கின்றோம். இன்றைய இளையோர் இயேசுவிடம் இருந்து மட்டுமே பணிவையும் பொறுமையையும் கற்றுக்கொள்ள முடியும். **நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன், ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்., அப்போது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்** (புனித மத்.11:29) இயேசுவே, உண்மையான குருவும், ஆசானுமாம். அவரிடம் இருந்தே பொறுமையின் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

லூக்கா நற்செய்தியில், சொத்தில் தன்னுடைய பங்கைச் செலவு செய்து வந்த ஊதாரி மைந்தனை அமைதியாக, பொறுமையாகவும் வரவேற்ற தந்தையை நாம் காணலாம். (புனித லூக் 15ம் அதிகாரம்) நற்செய்தியாளர் நன்றாக அந்த தந்தையின் வேதனையை எடுத்துக் காட்டியுள்ளார். அவ்வேதனையின் காரணம் தன் மகன் தன்னை விட்டு விட்டு தனக்கு வேண்டியதுபோல வாழ சென்று விட்டது தான். நேரம், பொறுமையும் இருந்தால் **மல்பெரி இலைக்கள் கூட பட்டாக மாறும்** என்ற சீன முதுமொழி ஒன்று உண்டு. இவ்வுலகில் செய்த அரிய செயல்கள் அனைத்தும் ஓர் இரவில் நடந்தது. அன்று ஊதாரி மைந்தன் செய்த பெரிய தவறு. தந்தையின் நினைவே இல்லாமல் வாழ்ந்ததுதான்.

நாம் இயேசுவிடம் இருந்து விலகிச் சென்று வாழ்ந்தாலும் இயேசு நமக்காக பொறுமையாக காத்திருக்கின்றார் என்பதை மறந்துவிடக் கூடாது. தாய்மார்கள் உணவு செய்து வைத்து தங்களுடைய குழந்தைகளுக்காக காத்திருப்பதை காணலாம். அதைபோல இயேசு நம்முடைய பாவங்களில் இருந்து விடுபட நமக்காக ஆன்மீக உணவாக ‘**திவ்விய நற்கருணையைத் தயார் செய்து விட்டு காத்திருக்கின்றார்.** அதேபோல் பாவ மன்னிப்பு வழங்க, ‘ஒப்புரவு” என்னும் திரு அடையாளம் மூலம் எம்மை எதிர்பார்த்து பொறுமையாக காத்திருக்கின்றார். இவ்வருள் அடையாளங்கள் மூலம் இயேசுவின் உடனிருப்பையும் அவரது மெய்யான பிரசன்னத்தையும் உணர்ந்து கொள்ளும் நுண்ணறிவை பெறுகிறோம். அவர் அனைவரையும் மன்னிக்கும் மனதையும் கொடுப்பார். மனித வாழ்வில் நெருக்கடிகளே மனிதனைச் சிந்திக்க வைக்கிறது. கடவுளைத் தேடவும் அவரை அறியவும் செய்கிறது. பிரச்சனையில் இருக்கும் போது மனிதன் அமைதியாக கடவுளின் இனிமையான, அரவணைக்கும் குரலைக் கேட்கின்றான்.

இதோ, இன்னொரு தவக்காலமும் வந்து விட்டது. இப்படிப்பட்ட நிகழ்வுகளைக் கேட்டு நம் உடைகளைக் கிழித்துக் கொள்வதைவிட உள்ளங்களைக் கிழித்துக் கொள்வது மேல்.

ஏதோ ஒரு வழியில்

தொடர்ச்சி 15ம் பக்கம்



# இறை அருள் தரும் இனிய காலம்

# தவக்காலம்

ஆக்கம் :
அருட்சகோதரி. லூர்ட்ஸ் F.M.M

விபூதிப்புதனுடன் ஆரம்பமாகும் அருள் தரும் அரிய காலம் தவக்காலமாகும். நாற்பது நாட்கள் திருச்சபை அன்னை எம்மை மனமாற்றத்திற்கு வழிநடத்திச் செல்ல இறைவன் தரும் அரிய நாட்கள் தவக்கால நாட்களாகும். இறையருளை நிறையருளாகப் பெற்று எமது பாவவாழ்க்கையை விட்டுத் திருந்தி வாழ இறையேசு எம்மை அன்புடன் அழைக்கும் அரிய காலமிது

மத் 3:1-2 "மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது", இது திருமுழுக்கு யோவானின் வார்த்தைகள் ஆம் அடுத்த ஆண்டு தவக்காலம் வரும்வரை காத்திராது இவ்வருடமே இறைவன் தரும் காலத்தில் எமது வாழ்வில் வழிதவறித் தீய வழியில் வழிநடத்திருப்போம். எனவே இவ்வழியை விட்டு எப்படித் திருந்தித் திரு அருள் பெற்று தூய வாழ்வு வா நாம் ஆரம்பிக்க ஆண்டவன் அறைகூவி அழைக்கின்றார். ஆம் புது வாழ்வு வாழ்வது எப்படி எனச் சிந்திப்போம். திருச்சபை அன்னை தவக்காலத்தில் எமது ஆலயங்களில் மறையுரைகள், தினத்திருப்பலி, திருச்சிலுவைப் பாதைத்தியானம், ஒப்புரவு அருட்சாதனம் அடிக்கடி வழங்குதல், தபமுயற்சிகள் செய்யும் வழிமுறைகள் எடுத்துக்காட்டாகத் தொலைபேசியில் தேவையின்றிப் பலமணி நேரங்களைச் செலவழிப்பதைக் குறைத்தல், நவீன தொடர்பு சாதனங்களில் அதாவது இன்ரநெற், தொலைக்காட்சிப் பெட்டி இவற்றின் முன் இரவு நேரங்களில் காலத்தைப் போக்குவது போன்ற செயல்களை, நேரத்தைக் குறைத்துத் தியாகம் செய்வது, எமது அன்றாட அனா அவசியச் செலவுகளைக் குறைத்து அந்தப் பணத்தைச் சேகரித்து உயிர்த்த ஞாயிறன்று ஏழை எளியோருக்கு கொடுத்துதவுதல் பாடசாலை செல்லும் மாணவ மாணவிகள் இடைவேளையில் உணவு வகைகள் வாங்கி உண்பதைக் குறைத்து அப்பணத்தைச் சேகரித்து ஏழை மாணவ மாணவிகளுக்குக் கொடுத்து உதவலாம். வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் உண்பதைத் தவித்து அதில் சேகரிக்கும் பணத்தைப் பணமின்றித் தவிப்போருக்கு கொடுத்து உதவலாம். ஏன் ஒரு நேர உணவைக் கூட ஏழைகளுக்காகத் தியாகம் செய்யலாம். பலர் இவ்வாறு செய்வது வழமையாகும்.

தவக்காலத்தில் திருவிவிலியத்தை வாசித்து திருந்தி கிறிஸ்து அவன் கிறிஸ்து அவளாக மாறமுடியும் புதிய ஏற்பாட்டைப் புரட்டிப் படித்தால் கிறிஸ்துவின் வாழ்வை அவருடைய போதனைகளை ஆழ அறிந்து அவரைப் போல் நாமும் வாழமுடியும் இதற்குத் தூய ஆவியின் துணை வேண்டினால் அவர் தனது ஞானம், புத்தி, அறிவு ஆகிய கொடைகளை இனிதே வழங்கி எமக்கு கிறிஸ்துவைப் போல் வாழ வழிகாட்டுவார்.

ஒரு சில கிறிஸ்துவின் வார்த்தைகள் எமக்கு எடுத்துக் காட்டாக அமையும் மத்தேயு 6:3-4 "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.", "நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வதை இடக்கை தெரியாதிருக்கட்டும்"

"நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து முகத்தைக் கழுவுங்கள்"

இவைபோன்ற இனிய வசனங்களை வாசித்து நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ முயற்சிப்போம். இவ்வாண்டு. தவக்காலம் எமக்கு அர்த்தமுள்ள அரியகாலமாக மாறட்டும்.

# மறையாசிரியரும் மறைக்கல்வியும்

புதுச்செட்டித்தெரு புனித வியாகுலமாதா ஆலயத்தில் 08.02.2020 அன்று பங்குத்தந்தை அருட்பணி. மனோ-குமரன் அடிகளாரின் தலைமையின் கீழ் டிவைன் தியான இல்லத்திலிருந்து வருகை தந்த சகோ. சந்தோஷ் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரின் ஒரு நாள் தியானம் நடைப்பெற்றது.

மறையாசிரியர்கள் தாம் அழைக்கப்பட்ட நிலையை உணர்ந்தவர்களாய் கடவுளிடமிருந்து கிறிஸ்துவால் பெற்றுக்கொண்ட ஞானத்துடன் மாணவர்-களுக்கு கற்பிக்கவும், கற்பிப்பதை தத்தமது வாழ்வில் முன்மாதிரிகையாக வாழ்வது அவசியமென்பதை ஆணித்தரமாகவும், தெட்டத்தெளிவாகவும் சகோதரர் அவர்கள் விளக்கிக் கூறினார்.

மத் 18:14 இச்சிறியோருள் ஒருவர் கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பது விண்ணகத் தந்தையின் திருவுளம் எனவும் எடுத்தியம்பினார். இன்றைய காலக்கட்டத்தில் தொலைக்காட்சி, இணை-யத்தளங்கள், போதைப்பொருட்கள் ஆகியவற்றால் சீர்குலைந்துள்ள மாணவர்கள் நல்லவற்றை, தீமையானதாகவும், தீமையானதை நல்லவையாகவும் நோக்குவதால் மறையாசிரியர் ஞான அறிவை வளர்த்து, மனமுவந்து அவர்களை நேசித்து, வழிமுறைகளுடன் கையாள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நீதிமொழி 22:6 மாணவர்களுள் நான்கு வயது முதல் ஆறு வயதிலானவர்களுக்கே மறைக்-கல்வி போதனையில் அதிகளவான பங்கை வழங்கவேண்டுமென்றும், முதுமையிலும் அவர்கள் கைகொண்ட அந்நற்பழக்கங்களை கைவிடமாட்-டார்களென்று தெளிவுபடுத்தினார். மேலும் தாய்மை எனும் கருணை உள்ளத்தை மறையாசிரியர்கள் கைக்கொள்ளல் வேண்டும் என்பதையும் தம் சொந்தப் பிள்ளைகளாக அவர்களை பேணிக்காப்பதற்கான பல உதாரணங்களை கூறி விளக்கினார்.

முக்கியமாக முன் ஆயத்தமின்றி பாடங்களை மேற்கொள்ள வேண்டாமென்பதையும், அவ்வாறு செயற்படின் அதனால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கினார்.....

தொடர்ச்சி 15ம் பக்கம்..




வாலிபத்தின் வாசலில்
நிற்கும் வாலிபனே வா!
காதல் பற்றி உன் கருத்து
யாது? காதல் தோல்வி
என்றால் என்ன?
ஒருவனுக்கு இரண்டு
மூன்று காதல் தோல்வியா?
அது பற்றி என்ன
நினைக்கிறாய்? கண்ணோடு
கண் பேசும் காதல்
நெஞ்சோடு நெஞ்சே நீ
பேசும் காதல் என்ன?
நாகரீகமாக காதல் என்று
நாமம் சூட்டியிருக்கிறாய்?
இனிய இளைஞனே!
இரண்டாம் வத்திகான்
திருச்சங்கம் சாளரங்களை
எல்லாம் திறந்து
விட்டிருக்கிறது.
மணம் வீசும் தென்றலும்,
வெளிச்சம் உட்புக
மனக்கதவுகளையும்
திறந்து இருக்கிறது.

இரு உள்ளங்களின்
சங்கமம் காதல்
அந்த காதல்
மனையாளோடு வள்ளுவர்
வாசுகியாய் இனிமை மிகு
பாடலாய் பெருகூட்டுவதே
காதல்
மொழிவது முன் காதல்
வழிமொழிவது உடல்
அது ஒரு பருவகாற்று
வாலிபர்க்கு எல்லாம்
வீசியே தீரும்.
அகநானூறில் காதல் பற்றி
சங்க காலத்து நூலது
மொழிகிறது. புறநானூறிலும்
ஒருவன் பெயரை சுட்டி
விட்டால் அது அகநூலாகி
விடுகிறது.
நிகழ்காலத்து
பெரும்பாலும் இலக்கிய-
ங்கள் சுவைகளும்
ஒளிபடங்களும் சினிமாக்-
களும் இதைத்தான்
எடுத்தியம்புகின்றன.

இனிய இளைஞனே!
இருபது வயதுக்குள் காதல்
என்ற வார்த்தைக்கு
அவரவருக்கு ஏற்ற
வார்த்தையை பூசி
மெழுகியிருக்கிறார்கள்.

உன் தோளை தொட்டு
சொல்கின்றேன்
இளைஞனுக்கு யுவதியும்
யுவதிக்கு இளைஞனும்
புதிராகத் தோன்றும்
பொல்லாத வயது.

இளைஞனே
காதலில் தோல்வியுற்று
வந்து வாலிபனே கவிதை
எழுதாதே. காதலில் வெற்றி
பெற்று வாழ்க்கை எனும்
பாடத்தை எழுத வா!

ஒளி படைத்த கண்ணினே!
உறுதி கொண்ட
நெஞ்சினனே!
உன் கைகளில் பிச்சை
பாத்திரம்
முன்னோர்களின்
மகுடங்கள்
உன் தலையில்
சூடிக்கொண்டாய்
எப்போது அட்சய
பாத்திரமாகுவாய்?
உன் கிளைகளை ஏன்
நீட்டுகிறாய்?

காலாவாதியாகின கால
அட்டவணை அல்ல
உன் விளக்கு.
இறந்த காலத்திடம்
யாசிக்காதே?
உன் இருளின் விடியல்
நேற்றைய உதயங்கில்லை

ஏழேழு சந்ததிக்கும்
தொடருமாம் கல்வி
உழைக்கப்பெறந்தவனே
எப்போது
சம்பாதிக்க போகிறாய்
ஒருமையில் கற்ற கல்வியை
தொடர்ந்து வா!
உழைக்கும் கரங்கள்
இருக்குமளவும்
இறந்த காலத்தை
விட்டுவிட்டு நிகழ்காலத்தில்
வாழ்ந்து விட்டு ஏந்தவே!
விரைந்து வருவாய்!

# கிறிஸ்டீன் அமைப்பு



உலகளாவிய ரீதியில் பிள்ளைகள், இளைஞர்கள், மறையாசிரியர்கள் இன்னும் குடும்பங்களுக்காக பயிற்சி நெறி 08.02.2020இல் புனித வியாகுல அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. இதன் குறிக்கோள் “2033 இல் வருகின்ற யூபிலி ஆண்டிற்கான எமது ஆயத்தம்” என்பதாகும்.

### கிறிஸ்டீன் அமைப்பின் சுருக்கமான வரலாறு

கிறிஸ்டீன் அமைப்பு என்பது ஒரு கத்தோலிக்க ஆன்மீக, உள சமுதாய நலனைக் கருதி செயலாற்றுகின்றது. முப்பது வருடங்களுக்கு முன்பு பிள்ளைகளை வழிநடத்துவது தனது தேவ அழைத்தல் என்பதை நன்கு உணர்ந்த ஆசிரியை திருமதி. மேரி குட்டி தனது ஆசிரிய தொழிலை கைவிட்டு பிஜி, சந்தோஷ் ஆகிய இருவருடன் ஒன்றிணைந்து செயல்பட ஆரம்பித்தார். அவர்கள் மூவரும் தங்கள் வாழ்வை முழுமையாகவே அர்ப்பணித்தனர்.

கிறிஸ்டீன் என்னும் சொல் இரண்டு சொற்களின் இணைப்பாகும். அதாவது CHRIST = TEEN. கிறிஸ்து = 13 வயது தொடக்கம் 19 வயதானவர்கள் என்னும் கருத்தைக் கொண்டதாகும். இவ் அமைப்பு பொதுநிலையினரால் ஆரம்பிக்கப்பட்டது. இயேசுவின் இறுதி வேண்டுகோளாகிய “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்” (மாற் 16:15) என்பதை நிறைவேற்றுவது இவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

### நாங்கள் உலகிற்காக செபிப்போம்

**தந்தையாகிய இறைவன் உங்களை தேர்ந்தெடுத்தது எதற்காக?**

- செபிப்பதற்கு, ஆன்மாக்களை மீட்பதற்கு
- இன்னும் இயேசுவைப் பற்றி அறியாதவர்களுக்கு அறிவூட்டுவதற்கு
- தீய செயல்கள் நிலைத்திருக்கும் நாடுகளில் வசிப்பவர்களுக்காக
- விசுவாசம் குறைந்த, விசுவாசத்தை இழந்த இன்னும் மனித உயிர்கள் மீது பற்றற்ற மக்களுக்காக
- ஏழ்மை போலவே எண்ணிக்கையற்ற தேவைகள் உடையவர்களுக்காக
- இறைவனின் குழந்தைகளுக்காக யார் செபிப்பார்?
- இவர்கள் தேவைகளுக்காக முழந்தாற்படிவது யார்?

சிந்திப்போம், செபிப்போம், செயலாற்றுவோம்.

### பயிற்சி நெறி

2020 மாசி மாதம் 08ஆம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை பயிற்சி நெறி அருட்பணி. மனோகுமரன் அடிகளார் சிறப்பு வருகை தந்தவர்களை வரவேற்று அறிமுகப்படுத்தினார். பின்பு சகோதரர் ராஜேந்திரன் இறைவனுக்கு நன்றி கூறியதுடன் அவரது உரையை ஆரம்பித்தார். செபத்தின் வல்லமை, திருச்செபமாலையின் மகிமையைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார்.

எமது தூய்மையான வாழ்வு இறைவனுக்கு மகிமையை பெற்றுக் கொடுக்கின்றது. தூய வாழ்வு வாழ்வதற்கு செபம் அவசியம். அதேபோன்று பரிந்துரைச் செபம், பாவ வாழ்க்கையில் மூழ்கியுள்ளவர்களுக்கு, நோயுற்றோர் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து



கொள்வதற்கு, தூய ஆவியானவரின் பிரசன்னத்தை, வழிநடத்தலை வேண்டி செபிக்க வேண்டும். நினிவே மக்கள் தமது பாவங்களுக்காக மனம் வருந்தினர். யோசுவா கைகளை நீட்டியவாறு செபித்தார். அவ்வாறே தேவ தாயார் பாத்திமாவில் மூன்று சிறுவர்களுக்கு தரிசனம் கொடுத்து திருச்செபமாலையை செபிக்குமாறு வேண்டிக் கொண்டார். இன்றைய உலகிலும் பல அற்புதங்கள் தரிசனங்கள் மூலம் இறைவன் தம்மை வெளிப்படுத்துகின்றார். ஆகவே வரும் 2033இல் யூபிலி ஆண்டிற்கு ஆயத்தமாகும் நாங்கள் நம்பிக்கையோடு செபிக்கும்போது தமது பங்கில் செபத்தின் சிந்தனைகளின் செயல்களின் பலன்களை நாங்கள் காண்போம்.

திருப்பலி வழியாக இயேசு பூமிக்கு வருகின்றார். திருப்பலியில், திரு அருட்சாதனங்கள், அருட்தந்தையர்களால் வழங்கப்படுகின்றது. கொழும்பு மறைமாவட்டத்தில் 130 பங்குகள் உள்ளன. ஒரு பங்கிலிருந்து இரண்டு குருக்களையாவது உருவாக்குவதற்கு எமது ஜெபம் அவசியமாகும். ஆகவே எமது இலட்சியமுமாகும் என்று கூறினார். திருச்செபமாலை செபிக்கப்பட்டு திவ்விய நற்கருணை ஆராதனைக்குப் பின்பு பயிற்சி நெறி முடிவுற்றது.

**தொகுப்பு ஆசிரியை அன்ரனி.**

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲




# பெண்களை கொண்டாடுவோம்

**‘கட்டமைக்க பட்டவற்றில்**
**கட்டுப்பட்டு இருந்தோம்**
**வீறு கொண்டு எழுந்தோம்**
**விண் உயர முயற்சி செய்தோம்**
**அன்றே முடியவில்லை என்றானாலும்**
**21ம் நூற்றாண்டில் எதையும் சாதிக்க முடியும் - வீரப் பெண்களால்’!**

பெண்கள் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை நன்கறிந்து வளர்ச்சி பணியில் ஈடுபட்டு நாங்களும் வாழ்ந்து பிறரும் வாழ வழி செய்கிறார்கள்.

இன்று உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் மகளிர் தினம் சர்வதேச மகளிர் தினமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட தினம் : 18ம் திகதி பங்குனி மாதம் 1911ம் ஆண்டு. ஆகவே மகளிர் தினம் கொண்டாட ஆரம்பித்து இந்த வருடத்துடன் 106 ஆண்டுகள் முடிந்து விட்டன.

பிரெஞ்சு (French) புரட்சியின் போதே பெண்கள் தங்களுக்கும் ஆண்களுக்கு சமமான சுதந்திரம், சம உரிமை, அரச ஆலோசனை குழுமங்களில் பிரதிநிதித்துவம் கேட்டு, போராட்டத்தில் இறங்கினர். எட்டு மணி நேர வேலை, வேலைக்கு தகுந்த கூலி, அரசியல் வாக்குரிமை ஆகியவையும் அவர்களது புரட்சி செயல்பாட்டில் பட்டியலிடப்பட்டன.

அப்போது ஆரம்பித்த இந்த போராட்டங்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மெல்ல, மெல்ல உலகம் முழுவதும் பரவி, பெண்களிடையே ஒரு குறிப்பிடத்தக்க சாதாரண விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தன. பெண்கள் பலம் என்னவென்று உணரத் தொடங்கினர். பெண்ணடிமை, பெண்களை இழிவுபடுத்துதல், பெண்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தல், பெண் என்பதால் அவளை ஒதுக்குதல் ஆகிய சமுதாய போக்குகளுக்கு எதிராகவே இந்த போராட்டங்கள் நடந்தன. இந்த போராட்டங்களின் வெற்றியாய் உதித்ததே சர்வதேச பெண்கள் தினம் 1913ம் வருடம் முதல் பங்குனி மாதம் 8ம் திகதி சர்வதேச மகளிர் ஆண்டாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

பெண்ணின் பெருமை உணர்வோம். இன்றைய நாளில் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவிப்பதில் “சமயம், தமிழ்” இரண்டும் மகிழ்ச்சியடைகிறது.

உடலுறுதி கொண்ட ஆணைவிட பெண் சிறப்புமிக்கவள். தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக என்று நம் உறவின் அனைத்து பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். “ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்”, என்று கூறப்படுவது இதனால்தான். தோல்விகளை கண்டு துவண்டு விடாது அதனை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றிக்கண்ட பல பெண்கள் நம் மத்தியில் வாழ்கின்றனர்.

**‘மங்கையாய் பிறப்பதற்கே - நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா!’ (பாரதியார்)**

“பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்” இறைவன் என்கிறார் புலவர்.

கல்வியை கையில் எடுத்துக் கொள்ளுங்கள், கல்விதான் எமது ஆயுதம்! பெண்களே...

அப்போதுதான் எது பேச வேண்டும், எது பேசக்கூடாது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஆரோக்கியமாக இருங்கள். சிந்தையையும், உடலையும் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள்.

எக்காரணம் கொண்டும் எம் “பெண்” அடையாளத்தை மாற்றிக் கொள்ள கூடாது.

ஒரு பெண்ணுக்கு சுய மரியாதை (Self - Respect) கிடைக்கும் போதுதான் அவளுக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது.

**நீதிமொழிகள் 31:29-31**


“திறமை வாய்ந்த பெண்கள் பலர் உண்டு அவர்கள் அனைவரிலும் சிறந்தவள் நீயே” என்று அவன் சொல்வான்.

எழில் ஏமாற்றும், அழகு அற்றுப் போகும் ஆண்டவரிடம் அச்சம் கொண்டுள்ள பெண்ணே புகழத்தக்கவள்.

அவளுடைய செயல்களின் நற்பயனை எண்ணி அவளை வாழ்த்துங்கள் அவளது உழைப்பை மக்கள் மன்றம் பாராட்டுவதாக!...

**ஆக்கம் : அருட்சகோதரி. மார்கிரட்**
**நல்லாயன் கன்னியர் சபை**

2010 - 2020 ஞான ஒளி



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**தவக்காலத்தின் 1வது ஞாயிறு (01.03.2020)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் முதல் வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களாகிய நாம் இறைவார்த்தை வழிநின்று சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் சோதனையை சந்திக்க வேண்டும் என்பது இயற்கை. சோதனைகளை எவ்வாறு வெல்வது என்ற கேள்விகளுக்கு இன்றைய வழிபாடு பதிலைத் தருகிறது. இயேசு மூன்றுமுறை சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் சோதனையை வெற்றிகொண்டார். அதற்கு அவர் பயன்படுத்திய ஆயுதம் இறைவார்த்தை. மனிதன் அவனுடைய வாழ்க்கையில் பலவிதமான சோதனைகள் ஏற்பட்டாலும் அவற்றின் மூலம் அவனது வாழ்க்கை மாற்றியமைக்கப்படுவதை காண்கின்றோம். ஆனால் ஆண்டவர் எதிர்கொண்ட சோதனைகள் அவரது வாழ்வின் இலக்கையோ, அவரது பணிவாழ்வின் ஆர்வத்தையோ மாற்றவில்லை. சோதனைகள் அனைத்தையும் இறைவார்த்தையின் வல்லமையோடு வெற்றி கொண்டார். நாமும் நமது சோதனைகளை இறைவார்த்தை வழியாக, இடைவிடா செபத்தின் வழியாக, நீங்காத இறைநம்பிக்கை வழியாக வெற்றி கொள்ள இறையருளை வேண்டி பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 2: 7-9, 3: 1-7**

முதல் பெற்றோரைப் படைத்ததும் அவர்களின் பாவமும்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே, இரக்கமாயிரும், ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

**இரண்டாம் வாசகம் : உரோ 5: 12-19**

பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்.

**நற்செய்தி வாசகம் : மத் 4: 1-11**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

சாத்தானின் துணைக்கொண்டு உலக அரசியல் தலைவர்களாலும் பண பலம் படைத்தவர்களாலும் இறைமக்கள் பலராலும் வருகின்ற சோதனைகளை வெற்றிக்கொண்டு வீறுநடைபோடும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், பொதுநிலை ஊழியர் அனைவரையும் பாதுகாத்து அவர்கள் எப்பொழுதும் சாத்தானை வெற்றி கொண்டு வாழத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

மனமாற்றத்தின் பொற்காலம் என அழைக்கப்படும் தவக்காலத்தை தொடங்கியுள்ள நாமும் எமக்கு வரும் சோதனைகளையும் துன்பங்களையும் பொறுமையுடன் ஏற்று வாழவும் இக்காலத்தில் பயன்படுத்தப்படும் இறைவார்த்தைகளை கவனமுடன் செவிமடுத்து அவை காட்டுகின்ற வழியில் சிந்தித்து செயல்பட மனமாற்றத்தின் ஊடாகப் புதுவாழ்வைப் பெற்றிட வரமருள வேண்டுமென்று...

தவறு செய்வதும் சோதனைக்குள்ளாவதும் மனித இயல்பே ஆயினும் இயேசு எல்லாவித சோதனைக்கு உட்பட்டாலும் பாவத்தில் விழவில்லை. அவரைப் பின் செல்லும் நாமும் பாவத்தில் விழுந்தாலும் இயேசுவின் அருட்சாதனங்களைப் பெற்று பரிசுத்தமாய் வாழவும், இறைவார்த்தையினாலும் இடைவிடாச் செபத்தின் வழியாகவும் நீங்காத இறைநம்பிக்கையோடு சோதனைகளை வென்று வாழ வரமருள வேண்டுமென்று...

**தவக்காலத்தின் 2வது ஞாயிறு (08.03.2020)**

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் இரண்டாவது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களே! அன்பின் இறை உறவுகளே! இன்றைய வார்த்தை வழிபாட்டின் முதல் வாசகத்திலே இறைநம்பிக்கையின் தந்தையான ஆபிரகாமின் அழைப்பைப் பார்க்கின்றோம். இந்த அழைப்பு ஆபிரகாமின் அழைப்பு மட்டுமல்ல மாறாக அவரது சந்ததிகளின் அழைப்பையும் நினைவுபடுத்துகின்றது. இன்றைய இரண்டாம் வாசகம் கிறிஸ்தவ அழைப்பு கடவுளிடமிருந்து வருகிறது. அது தூய அழைப்பு எனப் பவுல் அடியார் விளக்குகின்றார். நற்செய்தியிலே கிறிஸ்துவினுடைய உருமாற்றம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கக்கூடிய அழைப்பு. கிறிஸ்தவனுக்கு உருமாற்றத்தை விட மனமாற்றம் மிகவும் முக்கியமானது என்பதைப் பார்க்கின்றோம். இயேசுவின் உருமாற்றத்தையும் தாண்டி உருமாற்ற நிகழ்ச்சியில் ஆழ்ந்த உண்மைகள் இருப்பதை அறிந்துகொள்ள அழைக்கப்படுகின்றோம். இந்நிகழ்வு நடந்தகாலம் இயேசு எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட காலம். தனது நண்பர்கள் கூட தன்னையும் தன் இலட்சியத்தையும் புரிந்து கொள்ளவில்லையே என விரக்தியில் இருந்த நேரத்தில் இது நிகழ்ந்தது. ஆயினும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் இலட்சியத்தில் இயேசு உறுதிபெற்றார். எனவே நாமும் எமது வாழ்வில் வரும் சோதனைகளை வெற்றி கொண்டு வாழ இறை அருளை வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 12: 1-4**

இறைமக்களுக்குத் தந்தையாகிய ஆபிராம் அழைக்கப்பெறுதல்

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே, உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதாக!

**இரண்டாம் வாசகம் : 2 திமொத் 1: 8-10**

இறைவன் நம்மை அழைத்து, நம்மீது ஒளி வீசுகிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது: "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்."

**நற்செய்தி வாசகம் : மத் 17:1-9**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய மைந்தன் இயேசுவால் நிறுவப்பட்ட திருஅவையானது என்றும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற பாடுபடும் பணியாளர்களான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவர்க்கும் உமது குறையற்ற அன்பையும் ஆசீரையும் வழங்கியருள வேண்டுமென்று...

இயேசு உருமாறினார் என்பதை விட தனது இலக்கு நோக்கிய பயணத்தில் உறுதி அடைந்தார் என்பதை உணரும் நாம் எமது வாழ்வில் துன்பங்கள் சோதனைகள் வேதனைகள் போன்றவற்றில் வீழ்ந்துவிடாமல் இயேசுவின் உதவியோடு சோதனைகளை வெற்றி கொள்ளும் உறுதி பெற்றவர்களாய் எமது இலட்சியப் பயணத்தை தொடர வரமருள வேண்டுமென்று...

மனித சாயலில் வந்த இறைமகன் இயேசு இறைவனின் மாட்சிமையை தம் சீடர்களுக்கு வெளிப்படுத்தியதன் வழியாக மனிதனே இறைவன் வாழும் உயிர் உள்ள ஆலயம் என்பதை வெளிப்படுத்தினார். இதை உணர்ந்தவர்களாக பிறர் பணியில் ஈடுபடும் போது எமக்கு வருகின்ற துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்று இறைவனின் மாட்சி விளங்க அவரின் சாட்சிகளாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

# மனிதனை கம்பீரமாக்கும் தியானம்...



**ஆக்கம் : அருட்சகோதரி. மார்கிரட்**
**நல்லாயன் கன்னியர் சபை**

தியானம் மனிதனை மலரைப்போல் மென்மையாகவும், சிங்கத்தைப் போல் கம்பீரமாகவும், சூரியனைப்போல் பிரகாசமாகவும் வைத்திருக்கும். தியானத்தால் விளைவும் பயன்களை சொல்ல வார்த்தைகள் காணாது.

## தியானம் என்றால் என்ன?

நான் யார்? என்பதை முழுமையாக அறிந்து கொள்ளும் பயிற்சியே தியானம் என்பதாகும். உள்ளே உறைந்துள்ள நான் யார்? வெளியுலகப் பார்வையில் காணப்படும் நான் யார்? தியானத்தின் மூலம் எனது மனக்கவலைகள் அகல்கின்றன. மிகுந்த சந்தோஷத்தை அனுபவம் செய்கின்றேன். மேலெழுந்த வாரியாக கவலையுடன் காணப்படும் நான் என்பது ஒன்று, மிக ஆழ்ந்து நோக்கும்போது உள்ளே இருந்து செயலாற்றும் நான் என்பது அமைதியுடன் விளங்குகின்றது. இன்னொன்று, மிகுந்த நல்ல எண்ணங்களுடனும் நற்குணங்களுடனும், அமைதியுடனும் உள்ளே இருக்கும் நான் என்பதே உண்மையானதாகும். மேலும் அமைதிக் கடலான எனது இறைத்தந்தையும் எனக்கு மிக அருகாமையில் இருக்கிறார் என்பதையும் இந்த தியானத்தின் மூலம் அனுபவம் செய்ய இயலுகிறது.

காணாமல் சென்றுவிட்ட ஆடு தனது தோள் மேல் இருப்பதை அறியாமல் தேடித்திரிகின்ற மேய்ப்பவரின் கதைப் பற்றி நாம் அறிவோம். நான் இதுவரை என்னுள்ளேயே இருந்துவரும் அமைதியைக் கண்டுணராமல், அதனை வெளி உலகில், மற்ற மனிதர்களிடம் இருப்பதாக, நினைத்து இதுவரை தேடி வருகிறேன்.

Meditation என்றால் நலம் பெறுவது To Heal என்று பொருள். தியானம் செய்வதும் ஒரு வழியில் மன நலனை அடைவதே ஆகும். நல்லெண்ணங்களை மனதில் உற்பத்தி செய்யும்போது, நமது ஆன்மாவை சரிவர உணர்ந்து கொள்ள இயல்கிறது. இதன் மூலம் என் ஆன்மாவின் இயற்கையான குணமான அமைதியை நான் எளிதான அனுபவம் செய்ய இயலுகிறது. அமைதியான குணம் உங்களுடைய இயற்கை குணமாக மாறிவிடும்.

- முதுகினை வளைக்காமல் சாதாரணமாக அமருங்கள். தரையில் ஒரு விரிப்பின் மீது அமரலாம். இது சிரமமாக இருந்தால் ஒரு நாற்காலியின் மீதும் அமர்ந்து பயிற்சி செய்யலாம்.
- அமைதி நிறைந்த இடம் அல்லது, அறை நல்ல காற்றோட்டமிக்க சூழ்நிலையாய் இருப்பது நலம்
- காலை, மாலை என எப்பொழுதும் தனிமையில் செய்யுங்கள். அதிகாலை நான்கு மணிக்கு ஆரம்பித்தால் மிகவும் நன்று.
- தியானத்தை எப்பொழுதும் மகிழ்ச்சியாக தொடங்குங்கள் அதேபோல் மகிழ்ச்சியாக முடியுங்கள்.
- தியானம் செய்ய பழக ஆரம்பித்துவிட்டீர்கள் என்றால் தடங்கல்கள் நிறையவே வந்து உங்களை ஈடுபட விடாமல் தடுக்கும். அது இயற்கையின் விளையாட்டு. ஆதலால் மிகுந்த மன உறுதியுடன் பழகுங்கள்.
- காலையில் தியானம் செய்ய முடியாவிட்டால் மாலையில் செய்ய முடியும் என்று நம்பிக்கை கொள்ளுங்கள்.
- எஜமானுக்கு விசுவாசத்தோடு இருக்கும் நாய் போல உங்கள் மனதோடு எப்போதும் விசுவாசத்தோடு இருங்கள்.

**உங்கள் அனைவருக்கும் என் இறைஆசீர்**

எமது பத்திரிகைகளை பார்வையிட, இணையத்தள முகவரி
http://www.colomboarchdiocesancatholicpress.com

**“இயேசுவுக்குள் தீ போலிருந்து அவரை இயக்கியது அவரது “இறை அனுபவமாகும்” (லூக். 12:49). புதிய ஏற்பாட்டின்படி இயேசுவின் சிறப்பான இறையனுபவங்கள் மூன்றாகும். அவை தபோர், கெத்சமெனி, கல்வாரி அனுபவங்களாகும். இவற்றுள் முதன்மையானதும், அவரது வாழ்வின் திருப்புமுனையாகவும் அமைந்தது யோர்தான் நதியில் அவர் பெற்ற திருமுழுக்கு அனுபவமாகும்.”**

# நாசரேத்து இயேசுவின் இறை அனுபவமும் விளைவும்



ஆக்கம் : அருட்பணி.
ஜெராட் டீ ரொசாய்ரோ, அ.ம.தி.

நாசரேத்து இயேசுவின் இறை அனுபவமும் அதன் விளைவும் என்ன என்று நற்செய்திகளின் அடிப்படையில் சிந்திப்பதும், அவை கிறிஸ்தவர்களுக்குத் தரும் வாழ்க்கைப் பாடம் என்னவென்று அறிவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயேசுவின் படிப்பினைகளுக்கும் பணிக்கும் அடிப்படைக் காரணம் அவரது இறை அனுபவமும், அதனால் அவரில் வளர்ந்து, அவரை ஆட்கொண்டிருந்த இறையாட்சிக்கான தாகமுமே என நற்செய்திகள் கூறுகின்றன. ஆயினும் இறையாட்சிக்கான பயணத்தில் இயேசு பல எதிர்ப்புகளையும், புறக்கணிப்பையும், பொய்யான குற்றச்சாட்டுக்களையும் சந்தித்தார். இறுதியில் மரணம்!

## இயேசுவின் திருமுழுக்கு அனுபவம்

அவரவர் அனுபவங்களே ஒவ்வொருவரையும் ஓர் தனித்துவப் பாங்குடன் சிந்திக்கவும், பேசவும், செயல்படவும் தூண்டுதலாய் அமைகின்றது. இதற்கு நசரேத்து இயேசுவும் விதிவிலக்கல்ல. **இயேசுவுக்குள் தீ போலிருந்து அவரை இயக்கியது அவரது “இறை அனுபவமாகும்” (லூக். 12:49). புதிய ஏற்பாட்டின்படி இயேசுவின் சிறப்பான இறையனுபவங்கள் மூன்றாகும். அவை தபோர், கெத்சமெனி, கல்வாரி அனுபவங்களாகும். இவற்றுள் முதன்மையானதும், அவரது வாழ்வின் திருப்புமுனையாகவும் அமைந்தது யோர்தான் நதியில் அவர் பெற்ற திருமுழுக்கு அனுபவமாகும்.** இறைவாக்கினர் சிறப்புக் காட்சி வழியாக இறைவனின் அழைப்பைப் பெற்றதுபோல (எசா. 6:1-13; எரே. 1:4-10,17-19; எசே. 1:1-25, 2:1-7; ஓசே.1:1-3:5; ஆமொ. 7:1-9) இயேசுவுக்கும் இறைவனின் அழைப்பு அவரது திருமுழுக்கு வேளையில் கிடைத்தது (லூக். 3:21-22).

**யோர்தான் நதியில் பாவிகள் வரிசையில் வந்து நின்று இயேசுவும் யோவான் அளித்த பாவமன்னிப்பின் திருமுழுக்கை இயேசுவும் பெற்றார்.** இதன் மூலம் அன்றைய யூத சமூகத்தில் பாவிகளாக எண்ணப்பட்டவர்கள் ஏழை எளியவர்களே. அவர்களோடு தம்மை ஒருங்கிணைத்துக் கொள்வதன் அடையாளமாகும். இன்னும், அது அனைவருக்குமே பாவமன்னிப்பு தேவை என இறைவாக்கினரின் அடையாளப்பாணியில் இயேசு காட்ட நினைத்ததாகும். “இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்....” (யோவா. 1:29). இயேசு பெற்றுக் கொண்ட பாவமன்னிப்பின் திருமுழுக்கு அவர் காட்டிய நீதியும், நேர்மையும் கொண்ட அறவாழ்வின் அடிப்படையில் அமைந்த புதிய சமத்துவ உறவுச் சமூக வாழ்வின் முதற்படியாகும்.

**அத்திருமுழுக்கு இயேசுவுக்கு ஆழ்ந்த இறை அனுபவமாகவும் அமைகிறது.** “உடனே வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி, புறா இறங்குவது போல தம்மீது வருவதையும் அவர் கண்டார்” (மத். 3:16). இயேசுவின் இந்த அனுபவத்தின் மூலம், மானிடருடன் உடனிருந்து, மானிடரின் நிறைவாழ்வில் அக்கறை கொண்டுள்ள இறைவன் (தொநூ. 3: 9-11; 4: 6-7, 9-10; விப. 3: 7-10) மக்களின் வாழ்வில் விடிவை மலரச் செய்ய தம்மை அழைப்பதாக இயேசு உணர்கிறார். “என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” (மாற். 1:11) என்பது இயேசுவின் இயல்பையும் அவரது பணிக்குரிய அழைப்பின் தன்மையையும் உணர்த்துகிறது.

## இயேசுவின் இறையாட்சித் தாகம்

**திருமுழுக்கு அனுபவம் இயேவுக்குள் “மண்ணுலகில் தீமூட்ட வந்தேன்...” (லூக். 12:49) என்ற வாஞ்சையை விதைத்த அனுபவமாகும்.** அது இறையாட்சியே. அதற்கு தம்மையே மையமாக வைத்து வாழும் மனநிலை மாறி மானிடர்கள் இறைமையம் கொண்டவராய் அறம் கொண்ட “நிறை வாழ்வை” நாடும் ஓர் மாற்றுச் சமூகமே இறையாட்சி வாழ்வு. இயேசுவின் இறையாட்சி வாழ்வு என்பது உடன்படிக்கை வாழ்வாகும் (விப. 19:5-6). இதனை அடைந்திட இயேசு “தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்....சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்” என்கிறார் புனித பவுல் அடிகளார் (பிலி. 2: 6-8).

இறையாட்சி எனும் இயேசுவின் இலட்சியத்திற்கு அடிப்படையாக இருந்தது இறைவன் ‘அப்பா’ என்ற நம்பிக்கையாகும். அவர் அன்புமயமானவர் (1யோவா. 3:8, 16). அவர் அனைவரையும் கருணையுடன் அரவணைத்து, வாழ்வு அளிக்கும் ‘அப்பா’ கடவுள் (லூக். 15: 11-32) என்பதே இயேசுவின் வாழ்வில் ஆணிவேர் போன்ற நம்பிக்கையாகும். எனவே இறையாட்சி என்பது அப்பா இறைவனின் திட்டமும் திருவுளமும் ஆகும். அதில் இறைவனின் ஆற்றல்மிகு அன்பு மனித வாழ்விலும், படைப்பு அனைத்திலும் நின்று நிலவி நிறைவளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. இந்த நம்பிக்கையால் தாம் இறைவனின் மகன் என்ற தன்னுணர்வையும், உறுதிப்பாட்டையும் இயேசு கொண்டார். இறையாட்சியின் பணியாளனாய் செயற்பட்டார்.

## இயேசுவின் இறையாட்சிப் பணி

**கடவுளின் வார்த்தைக்குப் பணிந்து, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே இறையாட்சிப் பணி என இயேசு உணர்ந்தார்.** இயேசுவின் பணி முறை சமூக மாற்றத்துக்கான பணி முறையாகும். அதனால் அவரே மக்களைத் தேடிச் சென்றார். அவர்களுடைய தெருக்கள், தொழுகைக் கூடங்கள், வீடுகள், வயல் வெளிகளுக்குச் சென்று அவரே மக்களைச் சந்தித்தார் (மத். 4: 12...; மாற். 3: 7...; லூக். 6: 17...). இறையாட்சி வாழ்வுபற்றி அவர்களுக்கு கற்பித்தார். இறையாட்சிக்குரிய இரக்கச் செயல்களில் ஈடுபட்டார்.

இயேசுவின் படிப்பினையில் ஏழை எளியவர்களுக்கு “இறையாட்சி உங்களதே”, “ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்” என அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினார் (லூக். 6:20). ஏழைகளுக்குப் பேறு என முழங்கிய இயேசு, “செல்வர்களே, ஐயோ! உங்களுக்கு கேடு” என அவர்களை எச்சரித்தார் (லூக். 6: 23-25). ஏன்? (லூக் 12:16-21). ஏழை எளியவர்களுடன் சமமாக உட்கார்ந்து உணவு உண்டார் (லூக். 15:1-7). கனானேயர்கள், சமாரியர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கச் சென்றார். அவர்களுடனும் உரையாடினார் (மாற். 7:24...; யோவா. 4:1...). வெளிவேடம் இல்லாத இறை வழிபாடும், பகட்டில்லாத தர்மச் செயல்களும், அறச்செயல்களும் வாழ்க்கையை அணிசெய்ய வேண்டும் என்றார். “பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” என்ற பொன்விதியைச் சொன்னார் (மத். 5 - 7). இயேசுவின் படிப்பினைகளும், போதனைகளும் அவரது காலத்து ரபீக்களுடைய போதனையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. இதனால் அவர்களுக்கு இயேசுவுடன் மோதல் ஏற்பட்டது. இயேசு மக்களை தூண்டிவிடுகிறார்; அவர்களைத் தவறாக வழிநடத்துகிறார் என இயேசுமீது குற்றம் சுமத்தினார்கள் (லூக். 24:5). இயேசு இறைவனை அப்பா என அழைத்தும், தன்னை இறைமகன் என்று கூறியும் இறை பழித்தல் செய்தாரெனக் குறை கண்டார்கள். இயேசுவின் இறையாட்சிக்கான படிப்பினைகளால் “இவன் சாக வேண்டியவன்” என்ற தீர்ப்பைப் பெற்றார்.

இயேசுவின் பரிவான இறையாட்சிச் செயல்கள்



**தவக்காலம் இயேசுவின் படிப்பினைகளையும், அவரது செயல்களையும் தியானித்துப் பயணிக்கும் ஓர் சிறப்புக் காலமாகும்.**

பலர் வாழ்வில் விடியலை ஏற்படுத்தின (மத். 9: 35-36). சமாரியருக்கும், கனானேயருக்கும், உரோமையருக்கும் அவரது இரக்கச் செயல் கிட்டியது (லூக். 7: 1-10). ஓய்வு நாளிலும் அவர் இரக்கச் செயல்கள் செய்தார். இதனால் அவரை எப்படி ஒழிக்கலாம் என்று அவருக்கு எதிராக பரிசேயர் சூழ்ச்சி செய்தார்கள் (மாற். 3: 1-6). ஏழைகளுடன் சமபந்தி அமர்ந்து உண்டு இறையாட்சி சமூகத்தில் அவர்களுக்கும் சமத்தவ உரிமையும் இடமும் என இயேசு உறுதிப்படுத்தினார் (மத். 4:12; மாற். 1: 1-2). ஆனால் பரிசேயரும், மறைநூல் அறிஞரும், “இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே” என்று முணுமுணுத்தார்கள் (லூக். 15: 1-2).

இயேசுவின் இறையாட்சி சமூகத்திற்கான படிப்பினைகளும், செயல்களும் அவர் காலத்து சமூகத் தலைவர்களின் சமூக சிந்தனையுடன் ஒத்திருக்கவில்லை. அவர் இறைவனைப் பற்றி கொண்டிருந்த நம்பிக்கையும், யூத சமய சட்டங்களுக்கு அவர் கொடுத்த விளக்கங்களும் அவர் காலத்து சமயத் தலைவர்களினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் அவர்கள் இயேசுவுக்கு மரணதண்டனை அளிக்க முடிவு செய்தார்கள்.

## இயேசுவின் அனுபவம் தரும் பாடம்

திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் நாம் இயேசுவைப் பின்பற்றி வாழ அழைப்புப் பெற்றுள்ளோம். சிறப்பாக, இயேசுவின் வழியில் இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்வது கிறிஸ்தவர் தம் அறக்கடனாகும். அதனால், “இறையாட்சி என்பது நாம் உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாகத் தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய இறையாட்சி மனப்பான்மையோடு கிறிஸ்துவுக்குப் பணிபுரிவோர் கடவுளுக்கு உகந்தோராயும் மக்களின் மதிப்புக்கு உரியோராயும் இருப்பர்” என்ற புனித பவுலின் அறிவுரை தெளிவூட்டுகிறது (உரோ. 14:17).

இயேசுவின் நெஞ்சில் எரிந்த இறையாட்சி தீயின் பிழம்புகளே அவருடைய படிப்பினைகளும், பணியுமாகும். அத்தீ இறையாட்சிப் படிப்பினைகளுக்கு முரணாக நம் உள்ளும், புறமும் இருப்பவற்றை எரித்து அழிக்க வேண்டும். அப்போதுதான் “என்னை நோக்கி, “ஆண்டவரே, ஆண்டவரே” எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளப்படி செயல்படுபவரே செல்வர்” (மத். 5: 21-23) என்ற இயேசுவின் வாக்கு நம்மில், நம்மால் நனவாகிட வாய்ப்புண்டு.

இயேசுவின் இறையாட்சிக் கனவு கிறிஸ்தவர்களில் நனவாகிட, வெறுமையாக்கல் அவசியமாகிறது. வெறுமையாக்கல் ஏற்பட்டால் மட்டுமே இயேசுவைப் போல அக்கறையும், ஈடுபாடும் கொண்டவராய் நாமும் வாழலாம். கிறிஸ்தவர்களுக்கு தவக்காலம் இயேசுவின் படிப்பினைகளையும், அவரது செயல்களையும் தியானித்துப் பயணிக்கும் ஓர் சிறப்புக் காலமாகும்.

# ‘அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக உயிர் தியாகம் செய்தவர்கள்’



**2019ம் ஆண்டு பாஸ்கா ஞாயிறு இடம்பெற்ற பாரிய தீவிரவாத தாக்குதலில் இறந்து போனவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளானவர்களை நினைவுகூரும் முகமாக நடாத்தும் விசேட நிகழ்ச்சியையொட்டி கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான செய்தி.**

**அன்பான சகோதர சகோதரிகளே,**

கத்தோலிக்கரின் மற்றும் கிறிஸ்தவ விசுவாசிகளின் புனித நாளான பாஸ்கா ஞாயிறன்று கிறிஸ்தவ தேவாலயங்களையும் மற்றும் ஏனைய சில இடங்களையும் இலக்கு வைத்து நடாத்தப்பட்ட, எமது இதயங்களை சோகத்திற்கு உள்ளாகிய அந்த மனிதாபிமானமற்ற தீவிரவாத தாக்குதல் இடம்பெற்று ஓராண்டு நினைவு நாள் எதிர்வரும் 2020 சித்திரை, மாதம் 21ம் திகதி நினைவுகூரப்படவுள்ளது. எவ்வாறு எமது திருச்சபையின் திருவழிபாட்டு நாட்காட்டியில் மிகவும் மகிழ்ச்சியான மற்றும் எதிர்பார்ப்புக்களால் நிறைந்த நாள் சோகமான நாளாகியது. தங்களது கடவுளுக்காக செய்யும் செயல் என்று கூறி தவறான வழியில் சென்ற இளைஞர் குழுக்களால் நடத்தப்பட்ட அந்த கடுமையான தீவிரவாத தாக்குதலால் தங்கள் வாழ்வை இழந்த 300ற்கும் மேலான எமது சகோதர சகோதரிகளில் அநேகமானோர் பாஸ்கா ஞாயிறு திருவழிப்பாட்டில் கலந்து கொண்ட விசுவாசிகளாவர்.

அன்று சுற்றுலா விடுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாரம்பரிய பாஸ்கா ஞாயிறு காலை உணவு விருந்தில் கலந்துக் கொண்டிருந்தபோது இறந்து போனவர்களில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் உள்ளடங்குவர். அன்று இறந்து போனவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் பெரும்பாலான கத்தோலிக்கர் கொழும்பு - 13 கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தலத்திலும், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தூய செபஸ்தியார் ஆலயத்திலும் திருப்பலியில் கலந்துக் கொண்ட விசுவாசிகளாவார்கள்.

## இழப்பு மற்றும் வலி

இந்த சோகமான சம்பவத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி, தங்கள் நெருங்கிய உறவினர்களை இழந்த துக்கம், வேதனை, கண்ணீர், எமது இதயத்தை கிழித்தது. நாங்கள் கேட்கும் கேள்வி என்னவென்றால் ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என்பதாகும். அதாவது நாட்டில் அனைத்து பிரஜைகளோடும் சமாதானமாக சகோதரத்துவத்துடன் வாழ்ந்த எங்களுக்கு ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என்பது எங்களது கேள்வியாகும்.

அன்று நான் தாக்குதலுக்கு உள்ளான கத்தோலிக்க தேவாலயங்களை பார்வையிட சென்றிந்தபோது கண்ட காட்சிகளால் தாங்கமுடியாத அதிர்ச்சிக்கு உள்ளானேன். தாங்க இயலாத வேதனை, பாரிய அதிர்ச்சியோடு விடை கண்டு பிடிக்க இயலாத பல கேள்விகளால் எனது இதயம் அதிர்ந்துபோனது.

தங்களது சமயம், மொழி, இனம், சாதி எதுவாக இருந்தாலும் சகோதரர்களுக்கு எதிராக இத்தகைய செயலை செய்ய எவ்வாறு இயலும்? அவர்கள் நம்புகின்ற மற்றும் கூறுவதன்படி, சமாதானத்தை அன்பை விரும்புகின்ற மகா இரக்கம் நிறைந்த எல்லாம் வல்ல இறைவனை விசுவாசிப்பவர்களால் இறைவனின் நாமத்தால் எவ்வாறு அத்தகைய குற்றச்செயலை செய்ய முடிந்தது? இந்த துரதிஷ்டமான சம்பவம் நடைபெற்று 10 மாதங்கள் கடந்தாலும் தாங்கள் அனுபவித்த அதிர்ச்சி மிக்க மன அழுத்தத்திலிருந்து மக்கள் இன்னும் மீளவில்லை.

சில நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தை சேர்ந்த 26 வயது இளம் பெண், உயிர்த்த நாளன்று கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்து, ஒன்பது மாதங்களுக்கு பின்னர் தன் வாழ்விலிருந்து விடைப் பெற்றுக்கொண்டாள். காயமடைந்த நாள் முதல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவள் பல மாதங்களுக்கு பின்னர் தன் கண்களை திறக்கவில்லை.

இன்னும் சில விசுவாசிகள் கோமா நிலையிலும் படுக்கையிலும் வாழ்நாள் முழுவதும் அங்கவீனர்களாக துன்பப்பட்டு வருகின்றார்கள். நடக்க இயலாத குழந்தைகள் செயற்கை கை கால்களை பயன்படுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. குண்டின் பாகங்கள் உடலை துளைத்து சென்றிருப்பதால் ஊனமாகி துன்புறும் குழந்தைகளும் இருக்கின்றார்கள். ஏன் இது நடந்தது? இதயம் இல்லாமல் சகோதர மக்களின் இரத்தம் சிந்தப்படுவதால் அவர்கள் எதனை அடைந்தார்கள்? இந்தக்கேள்வி இன்றும் எங்கள் மனதை வேதனைப்படுத்துகிறது.

## தவறவிடப்பட்ட கடமை

இந்த தாக்குதல் இடம்பெறும்போது பதவியில் இருந்த அதிகாரிகளுக்கு உள்நாட்டு வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவுகள் வழியாக தெளிவாக முன்கூட்டியே தகவல் வழங்கப்பட்டிருந்தும், அவர்கள் எந்தவித இரக்கமுமின்றி தங்கள் கடமைகளை தவறவிட்டமை பற்றி அறியக்கிடைக்கும் ஒவ்வொரு தருணங்களிலும் எங்கள் வேதனை இன்னும் அதிகமாக அதிகரிக்கின்றது. இந்த பயங்கரமான தாக்குதலைப் பற்றி முழுமையாக கண்டுக்கொள்ளாமல், அதை அரசியல் விளையாட்டாக பயன்படுத்தியமை உண்மையாக பயத்தை ஏற்படுத்துகின்றது.

அதிகாரிகளின் அரசியல் அதிகாரப்போராட்டமானது இந்த தாக்குதல்தாரிகளின் செயற்பாடுகளை இலகுவாக செயற்படுத்த வழிவகுத்தமை இன்று தெளிவாகிறது. மாவனெல்லையில் புத்த பெருமானின் சிலைகள் உடைத்தமை பற்றி அறிந்திருந்தாரகள். அதை போன்று வினாத்தவில்லுப் பகுதியில் இயங்கி வந்த தீவிரவாத பயிற்சி முகாம் பற்றி அறிந்திருந்தார்கள். ஆயினும் ஆளும் கட்சியின் தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவின் உயர் அதிகாரிகள் இந்த தகவல்களை பெரிதுப் படுத்தாமல் உதாசீனமாக பார்த்துக்கொண்டு இருந்தார்கள் . அதன்படி இந்த சம்பவத்தை முழுமையாக தீவிரமாக விமர்சிக்க வேண்டியுள்ளது. அவற்றை நேர்த்தியாக விசாரித்து உயிர் இழந்தவர்களுக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் பாதிப்புக்குள்ளானோர்களுக்கும் நீதியைப்பெற்றுக் கொடுக்கவேண்டும். இவற்றுள் மிகவும் பயங்கரமான விடயம் என்னவென்றால் இந்த துயரகாரமான செயற்பாட்டிற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளைக் காப்பாற்ற சில அதிகாரிகள் மேற்கொண்ட வெட்கமற்ற முயற்சியாகும். இந்த விடயங்களை பற்றி விசாரிக்க நிறுவப்பட்ட ஆணைக்குழுவானது உண்மையை ஆராயாமல் குற்றவாளிகளையும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் மறைக்க முயன்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

## நீதி கிடைக்கும்வரை காத்திருக்கின்றோம்.

இந்த சம்பவத்தைப் பற்றி தற்போது விசாரணை நடத்திவரும் ஜனாதிபதியின் விசேட ஆணைக்குழுவால் முன்னெடுத்ததுச் செல்லும் முயற்சிகளை பாராட்டுகின்றோம். விசாரணையின் இறுதியில் உண்மையை எம்மால் அறிந்துக்கொள்ள முடியுமென நம்புகின்றோம். தேவையான அளவு நேரத்தை செலவழித்து நீதியான முறையில் விசாரணைகளை முன்னெடுத்து இந்த தாக்குதலை திட்டமிட்டு செயற்படுத்தியவர்கள், அதற்கு தொடர்புடையவர்கள் பணம் வழங்கியவர்கள் அவர்களுடன் ஏதோ ஒரு வழியில் தொடர்புடையவர்கள், தாக்குதல்தாரிகளை பாதுகாத்து அவர்களுக்கு வசதிகளை வழங்கியவர்கள் ஆகிய அனைத்து விபரங்களையும் வெளிக்கொணர வேண்டும். தீவிரவாத பயிற்சி பெற்றவர்களை இனங்காணப்படவேண்டும். அவர்களுக்கு பண உதவி வழங்கியவர்களையும் அவர்களின் தொலைபேசியையும் பரிசோதிக்க வேண்டும். இந்த மனிதாபிமானமற்ற மனிதப் படுகொலைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கிய அனைவரையும் பாகுபாடு பாராமல் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

இது மட்டுமல்ல இந்த பாஸ்கா தாக்குதலை பற்றி முழுமையாக அறிவித்திருந்தாலும் இதை பொருட்படுத்தாது அதை மக்களுக்கு அறிவிக்காமல் மறைத்த அரசியல் தலைவர்களின் செய்யற்பாட்டை தேடி பார்க்க வேண்டும். பொலிசார் மற்றும் ஏனைய அதிகாரிகள் இந்த தாக்குதலை தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் குற்றவாளிகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பை ஆராயவேண்டும்.

மேலும் இந்த துன்பகரமான சம்பவத்திற்கு முகங்கொடுத்த குடும்பங்களை விசேடவிதமாக படுகாயம் அடைந்தவர்கள், நோய்வாய்ப்பட்டிருப்பவர்களில் சிலருக்கு இன்னும் போதிய அளவு நஷ்டஈடு வழங்கல்ப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் இந்த குடும்பங்கள் மற்றும் நபர்கள் இனங்காணப்பட்டு நீதியின் பெயரால் அவர்களுக்கு நீதியான முறையில் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

கத்தோலிக்க மக்கள், எமது அதிகாரிகள் இதைக்குறித்து எவ்வாறு செயற்படுவார்கள் என அவதானித்துக்கொண்டு இருக்கின்றார்கள். எந்த ஒரு அரசியல் அமைப்பும் அல்லது வேறொரு குழுக்களால் இந்த தீவிரவாத தலைவர்களின் தாக்குதலால் அல்லது இந்த செயற்பாடுகளுக்கு பணம் வழங்கியவர்களை பாதுகாக்க அரசியல் ரீதியில் அல்லது வேறு வழியில் செயற்பட்டிருகின்றார்களா? என்பதை ஆராயவேண்டும். ஆனால் எமது இதயங்களில் ஒருபோதும் எந்தவொரு குழுவுக்கு எதிராகவோ மக்கள் சமூகத்திற்கு எதிராகவோ எவ்வகையிலும் வெறுப்போ தவறான உணர்வோ இல்லை என்பதை மீண்டும் மீண்டும் உறுதியாக கூற விரும்புகின்றோம். இந்த மனிதாபிமானமற்ற தாக்குதல் தொடர்பில் உண்மையை அறிவதே எமது ஒரே எதிர்பார்ப்போகும். எனவே நாங்கள் மத பேதங்கள் இன்றி எமது நாட்டிலுள்ள அனைவர் மீதும் உயர்ந்த மதிப்பு வைத்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்

## நினைவு தின நிகழ்வுகள்

அன்று அந்த துர்பாக்கியமான தாக்குதலுக்கு இலக்காகி தங்கள் வாழ்வில் இழப்பீடு வழங்கிய அனைவரையும் ஒருபோதும் மறக்காது இருப்பது கொழும்பு உயர்மறைமாவட்ட கடமையாக இருப்பதோடு, இதில் இறந்துப்போனவர்கள், காயமடைந்தவர்கள் ஆகிய அனைவரையும் நினைவுக் கூறி எம்மோடு ஒன்றிணையுமாறு அனைத்து சகோதர மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். இந்த நினைவு நிகழ்வுகள் 2020 சித்திரை மாதம் 17திகதி முதல் 21ம் திகதி வரை கீழ் குறிப்பிட்டவாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

1.கொழும்பு உயர்மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்கு ஆலயங்களிலும் சித்திரை மாதம் 16,17 மற்றும் 18ம் திகதிகளில் விசேட செப வழிபாடுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு ஒவ்வொருநாளும் இரவு 7.00மணி முதல் திருமணித்தியாலம் மற்றும் நற்கருணை வழிபாடு நடைபெறும். இந்த மூன்று நாட்களிலும் பாஸ்கா குண்டு வெடிப்பில் இறந்துப்போனவர்களுக்காகவும் காயமடைத்தவர்களுக்காகவும் விசேட செபவழிபாடுகளை நடத்துமாறு நான் அனைத்து பங்குத்தந்தையர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். கொழும்பு உயர்மறைமாவட்ட திருவழிபாட்டு அலுவலகத்தினால் இந்த செப வழிபாடுகள் நடத்துவது குறித்து உங்களுக்கு அறிவுறுத்துவார்கள். ஏனைய மறைமாவட்டங்களில் வாழ்கின்ற எமது சகோதர சகோதரிகளையும் தங்கள் பங்குகளில் செப வழிபாடுகளை ஒழுங்கு செய்யுமாறு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# கடவுளின் விஜயம் !

அன்று ஞாயிற்றுக்கிழமை என் பங்கு முழுவதும் ஒரே பரபரப்பாய் தென்பட்டது. தோரணங்கள் கட்டுவதும், வீடுகளை அலங்கரிப்பதும், ரோடுகளை சுத்தம் செய்வதுமாக சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் பிஸியாக இருந்தார்கள். அப்போது ஒரு வயதான பெரியவர் வெளியூரிலிருந்து அவ்வூருக்கு வருகிறார். அங்கு நடக்கும் அனைத்தையும் பார்த்துக்கொண்டே குட்டித் தெருவில் வசிக்கும் மாயனிடம் அவர் கேட்டது:-

**தாத்தா:** என்னப்பா, ஊரே ஒரே அமர்க்களமாய் இருக்குது?

**மாயன்:** அதுவா தாத்தா..! எங்க ஊருக்கு இன்னைக்கு கடவுள் வாராரு

**தாத்தா:** அப்படியா! சந்தோசம்

(சற்று தூரம் நடந்து பெரிய தெருவை அடைந்தார். அங்கே இரு சிறுவர்கள் உரையாடுவது அவர் காதில் விழுந்தது)

**சின்னா:** கடவுள் எப்படி இருப்பாரு?

**பெரியன்:** யாருக்கு தெரியும்? இதுவரைக்கும் நான் கடவுளை பார்த்ததில்லை. ஆனா அவரு பெரிய தாடி வெச்சிருப்பாராம். உயரமாக இருப்பாராம். அவரால செய்ய முடியாதது எதுவும் இல்லையாம். எங்க அம்மா சொன்னாங்க.

(சிறுவனை தட்டிக்கொடுத்து அப்பெரியவர் ஒரு வீட்டிற்குச் சென்று தண்ணீர் கேட்டார். வீடுகளை அலங்கரிப்பதில் மும்முரமாய் இருந்த அவர்கள் அவர் தண்ணீர் கேட்டதையே மறந்து விட்டனர். அவ்வீட்டில் வயதான ஒன்றும் முடியாத நிலையில் உள்ள ஒரு பாட்டி திண்ணையில் கிடத்தப்பட்டிருந்தார். அவர் அப்பெரியவரைப் பார்த்து கூறியது)

**பாட்டி:** அய்யா, பெரியவரே, இந்த நெலம தான் எனக்கும். இன்னைக்கு எங்க ஊருக்கு கடவுள் வாராரு. என்னை அவரோடு பரலோகத்துக்கு கூட்டிப்போனா நல்லா இருக்கும்

(தாத்தா அந்தப் பாட்டியின் வீட்டைக் கடந்து போனவுடன் அப்பாட்டி இறந்து விட்டார்.) மாலையானது, இரவானது, ஆனால் கடவுள் அவ்வூருக்கு வந்தபாடில்லை. மக்கள் அனைவரும் நொந்து போயினர். அவர்களுக்கு இப்போது கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற சந்தேகம் வந்துவிட்டது. திடீரென்று இடியுடன் பெருமழை பெய்தது. மக்கள் எல்லோரும் வீட்டை விட்டு வெளியே வந்து கடவுள் வரப்போறாரு! என்று சொல்லிக் கொண்டே வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது மெல்லிய காற்றில் கடவுள் பேசினார்...

**கடவுள்:** காலை முதல் மாலை வரை உங்களோடு நான் இருந்தேன். உங்களின் வேலையின் மிகுதியாலும், பிறரின் தேவைகளுக்கு நீங்கள் செவிகொடுக்காமல் இருந்ததாலும் நீங்கள் என்னைக் காணமுடியாமல்போயிற்று. நானோ உங்கள் ஒவ்வொருவரின் இதயத்தையும் கடந்துச்சென்றேன். வெளி ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம்கொடுக்காமல் பிறருக்கும் உங்கள் உள்ளங்களுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். நான் அங்கேயே வாழ்கிறேன் என்றார்.



பெயர்: ரா. ரசிகா சாந்தனி. தெனியாய,
வகுப்பு: 10. மறைப்பாடசாலை: புனித சூசையப்பர் ஆலயம்

# மறைக் கல்வி அறிவோம்

## கத்தோலிக்க திருச்சபை



**05. திருச்சபை கத்தோலிக்கம், அல்லது உலகளாவியது என அழைக்கப்படுவது ஏன்?**

- கத்தோலிக்க திருச்சபையானது எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லா மக்களினங்கள் மத்திலேயும் மாறுப்பட்டிராமல் இருப்பதே கத்தோலிக்கம் அல்லது உலகளாவியது என்பதாகும்.

**06. கத்தோலிக்க திருச்சபையினுள் அப்போஸ்தலிக்கம் இருக்கின்றது என கூறுவதெப்படி?**

- கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகள், பதவி நியமனங்கள் தூதுரைப்பணி, ஆகியவை கிறிஸ்துவினாலேயே நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களிடமிருந்து இடைவிடாமல் தொடர்ந்து நிலவுவதாலேயே அவ்வாறு கூறப்படுகிறது.

**07) அப்போஸ்தலர்களின் இடத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள் யார்?**

- ஆயர்கள்.

**08) கிறிஸ்துவின் சீடர்களில் எவருக்காவது திருச்சபையின் செயற்பாட்டில் சிறப்பான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா?**

- ஆம். பேதுருக்கு கொடுக்கப்பட்டது.

**09) ஆன்மீக பணியில் ஆயர்களுக்குத் துணையாயிருப்பவர்கள் யார்?**

- குருக்கள்.

**10) திருச்சபை தன் தூதுரைப் பணியினை இலகுவாக மேற்கொள்ள அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அருங்கொடை யாது?**

- ஆளும் வரம், வளுவா வரம்.

### கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் 10 நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அர்ஜென்டினா | - | 4 கோடி |
| 2. | காங்கோ | - | 4.3 கோடி |
| 3. | ஸ்பெயின் | - | 4.3 கோடி |
| 4. | கொலம்பியா | - | 4.5 கோடி |
| 5. | பிரான்ஸ் | - | 4.8 கோடி |
| 6. | இத்தாலி | - | 4.5 கோடி |
| 7. | அமெரிக்கா | - | 7.2 கோடி |
| 8. | பிலிப்பைன்ஸ் | - | 8.3 கோடி |
| 9. | மெக்சிகோ | - | 11 கோடி |
| 10. | பிரேசில் | - | 17.2 கோடி |




## விவிலிய பகுதி




### நற்செய்தி : புனித மாற்கு

**அதிகாரம் – 10**

188. இயேசு சீடர்களிடம் யார் இறையாட்சிக்கு உட்படமாட்டார்? என்று கூறினார்?
189. ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது யார் யாரிடம் கூறியது?
190. சீடர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டது என்ன?
191. மனிதரால் இது இயலாது ஆனால் கடவுளுக்கு அப்படியல்ல கடவுளால் எல்லாம் இயலும் என்று யார் யாரிடம் கூறியது?
192. பேதுரு இயேசுவிடம் கூறியது என்ன?
193. இயேசு அரியணையில் அமரும்போது அவரது வலப்புறமும் இடப்புறமும் அமர விரும்பியது யார்?
194. இயேசுவின் வலப்புறமும் இடப்புறமும் அமர்வது யார்?
195. மானிட மகன் எதற்கு வந்தார்?
196. இயேசு எந்த இடத்தில் குருடனின் கண்களை திறந்தார்?
197. பார்த்திமேயுவின் தந்தை பெயர்?

14ம் பக்கம் தொடர்ச்சி

**ஞான ஒளி**
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
கொழும்பு 08.
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**பங்குனி மாதம் 09ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.

# எட்டாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள்

## பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக!

01. பொய் பேசுதல்
02. கோள்சொல்லுதல்
03. வதந்தி பரப்புதல்
04. துவேசம், ஏமாற்றுதல், வஞ்சித்தல், நேர்மை இன்மை, பொறாமை, தூற்றுதல்
05. தொழில் இரகசியங்களை வெளிப்படுத்தல்
06. தன் குற்றங்களைப் பிறர் மேல் சுமத்துதல்
07. சுய இலாபத்தை மட்டும் கருத்திற் கொள்ளல்
08. பெற்றோர் ஆசிரியர், அதிகாரிகளை ஏமாற்றுதல்
09. சுய கௌரவத்திற்காகப் பிறரைக் காட்டிக் கொடுத்தல்
10. பொய் வாக்குறுதி வழங்குதல்
11. பிறருக்குப் பொய் கூறி அலைக்கழித்தல்
12. ஒப்புரவில் குற்றங்களை மறைத்தல்
13. தவறானதைக் கற்பித்தல். பிறரை ஏமாற்றுதல்
14. பொய் வதந்திகளால் ஒருவருடைய நற்பெயரைக் கெடுத்தல்
15. மற்றவர்களைப் பற்றிப் பரப்புதல் , முகஸ்துதி கூறுதல்.
16. அளவுக்கு மீறி தன்னைப் புகழ்தல்
17. பிறருடைய முன்னேற்றத்திற்கு தடையாக இருத்தல்
18. பிறருடைய கருத்தைத் தனது கருத்தாகக் கூறல்..



வி.ரஞ்ஞனா செவ்வந்தி.
வகுப்பு: 10. புனித சூசையப்பர் ஆலயம்,
தெனியாய.

## மாணவர் ஒளி





# உன்னோடு ஒரு நிமிடம்

# இயேசு மனிதர்களைப்போல் கண்ணீர்விட்டார்

நண்பா
நீ உணர்ச்சி உள்ளவன். துன்பத்தில் துவளுவதும், இன்பத்தில் துள்ளுவதும் இயற்கைதான்.

உணர்வுகளை அடக்கி வைப்பதும் சரியான முறைகளில் அதைப் பயன்படுத்தாமல் இருப்பதும் எதிர்மறையான விளைவுளை ஏற்படுத்தும்.

நீ சரியான முறையில் உன் உணர்வுகளைக் என்னிடமும் நண்பர்களிடமும் வெளிப்படுத்த வேண்டும்.

என் மகன் தம் வாழ்வில் உணர்வுகளோடு வாழ்ந்தவர், தம் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் அடக்கி வைத்தவரும் அல்லர், மறைத்துக் கொண்டவரும் அல்லர்.

உயிரோட்டமுள்ள முழு மனிதனாக வாழ்ந்தவர் அவர். என் மகன் தம் உணர்வுகளை எளிய முறையில் ஏற்றுக்கொண்டார் பொருத்தமான சூழலில் தகுந்த முறையில் வெளிப்படுத்தினார். தகுந்த இடங்களிலும் தகுதியான நேரத்திலும் உணர்வுகளின் தேவையை நிறைவு செய்தார்.

மனித வாழ்வில் அழுகை என்பது உணர்வின் வெளிப்பாடு, பாசத்தின் நிலைப்பாடு.

நீ எதிர்பாராத செய்தியை ஆழமான காயத்தை வெளிப்படுத்தும் பொழுது அழுது விடுகிறாய்.

கண்ணீர் வடித்தல் என்பது உனது ஆளுமையின் குறைபாட்டின் அடையாளம் அன்று அது உயிரோட்டமுள்ள வாழ்வின் அடையாளம்

உன் இதயம் இன்னும் துடிக்கிறது என்பதன் அடையாளம் பிறர்மீது நீ கரிசனை கொள்கிறாய் என்பதன் அடையாளம்.

இறந்த மனிதர்கள் மட்டுமே அழமாட்டார்கள். நம்பிக்கையோடும் எதிர்நோக்கோடும் வாழுகின்ற எல்லா மனிதர்களுமே அழுவார்கள் நீ உயிரோட்டமானவன் ஆகவேதான் அழுகிறாய்

உன் கண்கள் அழவில்லையென்றால் உடலில் உள்ள மற்ற உறுப்புக்கள் அழத் தொடங்கும் உன் உடல் உறுப்புகள் மோசமான நிலையினை அடையும். உடலில் பல விதமான வியாதிகள் வரவும் வாய்ப்புக்கள் உண்டு.

என் மகன் இயேசுவும் அர்த்தமுள்ள வழியில் துயர உணர்வினை வெளிப்படுத்தினார் தம் அழுகையின் வழியாக உன்னைப் போன்ற உயிரோட்டமுள்ள மனிதத்தன்மை கொண்டவர் என்பதை நிலைநாட்டினார்.

இலாசரின் இறப்பில் இயேசு அழுதார் (யோவா 11:1-11). என் மகன் அவருடைய நண்பர் இலாசரின் இறப்புக்காக அழுதவர் மட்டுமன்று மாறாக மார்த்தா மரியா மற்றும் பிற மக்களின் துயரங்களைக் கண்டு கண்ணீர் வடித்தவர்.

இயேசு எருசலேம் நோக்கி அழுகின்றார் (லூக் 19:41) தம் அன்பை ஏற்றுக்கொள்ள மறுத்த கல்லான இதயத்தன்மை கொண்ட எருசலேம் மக்களுக்காகவும் என் மகன் இயேசு அழுதார்.

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் மக்களை கண்மணி போலக் காத்து மீட்டு வந்தேன். அவர்களுக்காக கானான் நாட்டினை உருவாக்கிக் கொடுத்தேன். ஆனால் என் மக்கள் பிற தெய்வங்களை நாடினர். தீமைகளின் ஆதிக்கத்தால் பாவத்தில் மூழ்கினர்.

செய்த பாவத்திற்காக மனம் வருந்தவும், மனமாற்றம் பெறவும் வேண்டும் என யாரெல்லாம் அழைப்பு விடுத்தார்களோ அவர்கள் அனைவரையும் என் மக்கள் துன்புறுத்தினார்கள். இத்தகைய பிரமாணிக்கமின்மையையும் என் மக்களுக்கு எதிரிகள் வழியாக வருகின்ற பேரழிவையும் நினைத்து என் மகன் அழுதார்.

தொடரும்

# அமைதியே வாழ்வின் இலக்காக

அமைதியானவர்கள் தம் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளைத் தாங்கிக் கொள்வதை விட அவற்றை மகிழ்ச்சியாக அனுபவிப்பார்கள். அவர்களோடு இருப்பது மற்றவர்களையும் மகிழ்ச்சியாக இருக்கத்தூண்டும். அவர்கள் எச் சூழலையும் தம் வசப்படுத்தி மகிழ்ச்சியாக வைத்திருக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பார்கள்.

### 1. உம்மை நடுநிலையோடு மதிப்பிடப் பழகும்

சிலர் தமது வாழ்வை அதிதீவிரமான பொறுப்புணர்ச்சியோடு செலுத்துவதனால் எளிதில் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். அவர்கள் தம்மை அளவுமீறி எடைபோடுகின்றனர். தாம் எங்கும் எதிலும் இன்றியமையாதவர்கள் என்று எண்ணுகின்றனர். தாம் இல்லாவிட்டாலும் உலகம் உருளும் என்பதை மறந்து விடுகின்றனர்.

அமைதியானவர்கள் இயற்கையின் வல்ல சக்திகளோடு தம்மை ஒப்பிட்டுப்பார்க்கும்போது தாம் குறிப்பிடத்தக்கவர் அல்ல என்பதையும் தாம் அற்பமானவர்கள் என்பதையும் உணருகின்றனர். அவர்கள் தாழ்ச்சியுள்ளவர்கள். ஆனால் சுயமதிப்பீடு குறைந்தவர்களல்ல, வாழ்வில் தாம் செய்யும் பங்களிப்பு தனித்துவமானது என்பதை உணருகின்றனர்.

### 2. உமது குணங்களைத் தெரிந்து-கொள்ளும்

பலர் தமக்குள்ளே என்ன நடக்கிறது என்று தெரியாததால் தமது வாழ்வில் பல முரண்பாடுகள், வேதனைகளை அனுபவிக்கின்றனர். தம்மைப்பற்றிய சரியான புரிந்துணர்வு அவர்களை அமைதியானவர்களாகவும் எதையும் மேற்கொள்ளக்கூடியவர்களாகவும் ஆக்கும். மனித இயல்பிலே பாலியல் தவிர்க்கமுடியாத ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப் பழகாததால் பல இளைஞர் யுவதிகள் பெரும் உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். பாலியல் தன்னிலே பாவமானது ஒன்றல்ல என்பதை உணரத்தவறுகின்றனர். ஒவ்வொரு பாலுணர்வும் ஒரு சோதனை என்று எண்ணுகின்றனர். இதனால் அவர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர்.

### 3. வரலாறு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்

வரலாறு பற்றிய எமது அறிவு எமது எதிர்காலத்தை உள்ளச் சமநிலையோடு எதிர்கொள்ள உதவிசெய்யும். எமது வாழ்வுபற்றியும் தற்கால நாகரீகம் பற்றியும் சரியான கண்ணோட்டத்தைக் கொடுக்கும். மனித விலங்குகள், தாவரங்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய அறிவு நமக்கு அவசியம். இந்த நூற்றாண்டில் ஆட்சிகளில் ஏற்பட்ட வெற்றி, தோல்விகள், வாழ்வின் முன்னேற்றங்கள் பற்றிய அறிவு நமக்கு அவசியம்.

மனிதன் அழியப்போகிறான், உலகமுடிவு வந்துவிட்டது என்று மக்கள் கூறும்போது நாம் கிலேசமின்றி வாழுவோம். அனைத்திற்கும் மேலாக இப்பெரிய பிரபஞ்சத்திற்கு நாம் கொடுக்க வேண்டிய பங்கு உண்டு என்று உணரும்போது அது நமக்கு ஒரு குறிக்கோளை, உறுதிப்பாட்டை, உயர்பண்பைக் கொடுக்கும்.

### 4. சற்று தளர்வான நிலையில் (relax) வாழப்பழகவேண்டும்.

சற்று தளர்வான நிலையில் வாழ்வதை உங்கள் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இடையிட்ட நேரங்களில் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது நாற்காலியில் அமர்ந்து உங்கள் நரம்புகளைத் தளர்வாக்கிக் கொள்ளுங்கள். கண்களை மூடி முகத்தைப் புன்முறுவலோடு வைத்துக் கொள்ளுங்கள். உங்களில் புன்னகை தவழும்போது நீங்கள் இளமையாகவும் கவர்ச்சியாகவும் தோன்றுவீர்கள்.

### 5. எதிர்மறையான உணர்வுகளை விலக்கு-ங்கள்.

கவலையோடு இருக்கும் பழக்கத்திலிருந்து விடுபடுங்கள். பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும்போது நேர்மையாக முகங்கொடுங்கள். பிரச்சினைகளைப் பற்றி முன்கூட்டியே நினைக்கவேண்டாம். எப்பொழுதும் நம்பிக்கையோடும் துணிவோடும் இருங்கள். பகைமையைக் களைந்தெறியுங்கள். அனைவரையும் அரவணைக்கும் அன்பு உங்களை ஆட்கொள்ளட்டும். தாராளத்தன்மை, மன்னிப்பு, கரிசனை என்பவற்றை வளர்த்துக் கொண்டால் அமைதி ஏற்படும்.




அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.

> பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும்போது நேர்மையாக முகங்கொடுங்கள். பிரச்சினைகளைப் பற்றி முன்கூட்டியே நினைக்கவேண்டாம். எப்பொழுதும் நம்பிக்கையோடும் துணிவோடும் இருங்கள். பகைமையைக் களைந்தெறியுங்கள்.

### 6. உங்களுக்காக வாழ்க்கைக் கோட்-பாட்டை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பிரபஞ்சத்தின் பின்னணியில் ஒரு பெரும் சக்தி இருப்பதை நம்புங்கள். அந்த சக்தியின் சாயலாக விவிலியம் கூறுவதுபோல "கடவுளின் பிள்ளையாக" நீங்கள் படைக்கப்பட்டிருப்பதை நம்புங்கள். அப்போது "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் அமைதியையே உங்களுக்குத் தருகிறேன்" என்று இயேசு கூறியதுபோல உண்மையான அமைதியை அனுபவிப்பீர்கள்.

# சிறார் இல்லாத இடங்களில், வருங் காலமே கிடையாது




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறாரை ஊக்கப்படுத்தி எழுதிய குறுஞ்செய்திகள் கொண்ட தொகுப்பு, “I Bambini sono speranza” என்ற தலைப்பில், ஒரு நூலாக வெளியிடப்பட்டுள்ளது

**சிறாரே, நம்பிக்கை**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறாரை ஊக்கப்படுத்தி எழுதிய குறுஞ்செய்திகள் கொண்ட தொகுப்பு, **சிறாரே, நம்பிக்கை** (I Bambini sono speranza) என்ற இந்நூல் **மகிழ்வு, ஆற்றல், மற்றும் வாழ்வு பற்றிய உருவங்களை முழுவதும் கொண்டிருக்கும் இந்நூல், தூய்மையான காற்றின் சுவாசம்** என்று கூறிய கர்தினால் தாக்லே அவர்கள், பிலிப்பீன்சில் தனது இமுஸ் கிராமத்தில் தன் குழந்தைப் பருவத்தை நினைவுபடுத்துகின்றது என்று கூறினார்.

தொலைக்காட்சி பெட்டிகள் இல்லாத அக்காலத்தில், மாலைவேளைகளில், தன் தாய், சிறார்க்கு எளிய நூல்களை வாசித்து காட்டுவார் என்றும், இந்நூலில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறாரிடம் நேரிடையாகப் பேசுகின்றார் என்றும் கூறினார், கர்தினால் தாக்லே.

சிறார் தாராளமனதுடன் இருக்கவும், அழுவதற்கு அஞ்ச வேண்டாமெனவும், வாழ்வில் நல்லது ஆற்றவேண்டுமெனவும், மகிழ்வாக ஆடிப்பாட வேண்டுமென்றும், திருத்தந்தை, இந்நூலில் எளிய வார்த்தைகளால் சிறாரிடம் நேரிடையாகப் பேசுகிறார் என்றும், கர்தினால் தாக்லே அவர்கள் கூறினார்.

# மறைப்பணித்தளங்களில் பயிற்சி பெறுவது அவசியம்

**திருஅவையில், திருப்பீடத் தூதரகப் பணிகளை மேற்கொள்ள விரும்புவோர், ஏதாவது ஒரு மறைபரப்புப் பணிதளத்தில் ஓராண்டு பணியாற்றுவது அத்தியாவசியம் – திருத்தந்தை**

திருஅவைசார் பணிக்குரிய பாப்பிறை கழகத்தின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதைக்குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, ஏற்கனவே அது குறித்து, அமேசான் பகுதியை மையப்படுத்தி நடைபெற்ற ஆயர்களின் சிறப்பு மாமன்றக்கூட்டத்தின் இறுதி உரையில் இக்கருத்தைக் கோடிட்டுக்காட்டியிருந்தார்.

திருப்பீடத்தூதரகப்பணிகளில் ஈடுபடுவோருக்கு பயிற்சி வழங்கும் பாப்பிறை கழகத்தின் தலைவர், பேராயர் ஜோசப் மரினோ அவர்களுக்கு, திருத்தந்தை அனுப்பியுள்ள கடிதத்தில், நாடுகளுடன் உறவுகள் தொடர்புடைய பணிகளில் ஈடுபடவுள்ளோர், மறைப்பணித்தளங்களிலும் பயிற்சி பெறுவது இன்றியமையாதது என குறிப்பிட்டார்.

தங்கள் சொந்த மறைமாவட்டத்தில் அல்லாமல், வேறு ஒரு மறைப்பணித்தளத்தில், நற்செய்தி அறிவிப்புப்பணி நடவடிக்கைகளில் பயிற்சி பெறுவது, இன்றையத் திருஅவை சந்திக்கும் சவால்களை நன்முறையில் எதிர்கொள்ள உதவும் என, அக்கடித்தில் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வரும் கல்வியாண்டிலிருந்து, இச்செயல்திட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

# 2022ல், 16வது உலக ஆயர்கள் மாமன்றம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையில், உலக ஆயர்கள் மாமன்றச் செயலகத்தின் 15வது ஆலோசனை கூட்டம், வத்திக்கானில், பிப்ரவரி 6, 7 ஆகிய திகதிகளில் நடைபெற்றது

மக்கள், கட்டாயமாக தங்கள் இடங்களைவிட்டு புலம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சூழல்களைக் களைவதற்கு, அந்தந்த அரசுகள் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற தன் நம்பிக்கையை உலக ஆயர்கள் மாமன்றச் செயலகம் வெளியிட்டுள்ளது,

மனித வர்த்தகத்திற்கெதிரான விழிப்புணர்வு அவசியம் என்றும், சொல்லமுடியாத துன்பங்களைக் கொணரும் போர்கள் முடிவுக்குவர தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்றும், அரசுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது, அச்செயலகம்.

16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு கருப்பொருள், **இப்பூமியின் பல பகுதிகளில் இடம்பெறும் மக்களின் புலம்பெயர்வுகள் உட்பட பல்வேறு விவகாரங்கள்** இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன என்று கூறியுள்ளது.

அடுத்த உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு உலகளாவிய திருஅவை நன்கு தயாரிப்பதற்கு வாய்ப்புகள் வழங்கும் நோக்கத்தில், அம்மாமன்றத்தை, 2022ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் வைப்பதற்கு திருத்தந்தை தீர்மானித்துள்ளார்.

கர்தினால் அந்தோனியோ லூயிஸ் தாக்லே அவர்கள், நற்செய்தி அறிவிப்பு பேராயத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ளது, பாகிஸ்தானின் கராச்சி பேராயர் கர்தினால் ஜோசப் கூட்ஸ் அவர்கள், ஆலோசனை அவையின் புதிய உறுப்பினராக இணைந்துள்ளது போன்றவை இக்கூட்டத்தில் குறிப்பிடப்பட்டது.

இக்கூட்டத்தின் இறுதியில், புலம்பெயர்ந்தோரின் நிலை குறித்து இச்செயலகம் வெளியிட்ட அறிக்கையில், இம்மக்களை வரவேற்று, உதவிவரும் அரசுகள் மற்றும், அரசு-சாரா அமைப்புகளுக்கு, தன் பாராட்டுதல்களை தெரிவித்துள்ளது.

போர்கள், பொருளாதார சமத்துவமின்மை, வேலைவாய்ப்பின்மை, தரிசுநிலங்கள் அதிகரிப்பு, சமய அடக்குமுறை, பயங்கரவாதம், சுற்றுச்சூழல் நெருக்கடி போன்ற பல கராணங்களால் மக்கள் கட்டாயமாகப் புலம்பெயர்கின்றனர் என்றுரைக்கும் அவ்வறிக்கை, திருஅவை, அம்மக்களுடன் தோழமையுணர்வு கொண்டுள்ளது என்றும் கூறுகிறது.



## வத்திக்கானிலிருந்து திருத்தந்தை

# அமேசான் பகுதியின் அழகைக் கூறும் திருத்தூது மடல்




**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருவாக்கியுள்ள திருத்தூது அறிவுரை மடலை அவர் ஒரு காதல் கடிதம் போல வடித்துள்ளார்**

அமேசான் ஆயர்கள் சிறப்பு மாமன்றத்தின் விளைவாக, "Querida Amazonia" என்ற தலைப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருவாக்கியுள்ள திருத்தூது அறிவுரை மடலை அவர் ஒரு காதல் கடிதம் போல வடித்துள்ளார் என்று, திருப்பீடத் தகவல்தொடர்பு அவையின் செய்திப் பிரிவு இயக்குனர் முனைவர் அந்த்ரேயா தொர்னியெல்லி (Andrea Tornielli) அவர்கள் கூறியுள்ளார்.

இஸ்பானிய மொழியில் திருத்தந்தை உருவாக்கியுள்ள இந்த அறிவுரை மடலில், பல்வேறு கவிஞர்களின் உதவியுடன், திருத்தந்தை, அமேசான் பகுதியின் அழகையும், அப்பகுதியைக் குறித்து நாம் கொள்ளவேண்டிய மதிப்பையும் உணர்த்தியுள்ளார் என்றும், அமேசான் பகுதியைக் குறித்து பேசினாலும், இங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்கள் உலகம் அனைத்தையும் மனதில் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்று தொர்னியெல்லி அவர்களின் தலையங்கம் கூறுகிறது.

அமேசான் பகுதியில் பிறந்து வளர்ந்த மண்ணின் மைந்தர்கள், தங்கள் கலாச்சாரத்தையும், வழிபாட்டு முறைகளையும், வாழ்வாதாரங்களையும் காப்பதற்கு அனைத்துலக சமுதாயம் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மடல் வழியே அழைப்பு விடுத்துள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருவாக்கியுள்ள "Querida Amazonia" திருத்தூது அறிவுரை மடல், கத்தோலிக்கத் திருஅவையில், பணித்துவ முறைகளிலும், அதிகார கட்டமைப்பிலும் மாற்றங்களை உருவாக்க துணிவு பெறவேண்டும் என்பதை நினைவுறுத்துகிறது. அமேசான் பகுதியில் மத நம்பிக்கை வளர்வதற்கு பெண்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர் என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் அறிவுரை மடலில், சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளதை, தொர்னியெல்லி அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.



# இயேசுவின் தோற்ற மாற்றம்

**இயேசு இறந்து உயிர்த்த பின் பெறப்போகும் மகிமையின் முன் சுவையே அவரின் தோற்ற மாற்றம்.**

இயேசு ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்ந்தார். அவ்வாழ்க்கையில் அவர் சந்தித்த சோதனைகள் பல பல. அதிலும், மிகப் பெரிய சோதனை சிலுவைச் சாவு கடவுளின் அரசை நிறுவ வந்த தனக்கு சிலுவை சாவா? கடவுளின் பராமரிப்பை உணர்த்தச் செயல்பட்ட தனக்கு பாடுகளின் பாதையா? மனிதனின் பாவத்தையெல்லாம் தன்மேல் ஏற்று மன்னிப்பும், விடுதலையும் வாழ்வும் அருளும் அளிக்க வந்த தனக்கு செம்மறி போலச் சிலுவை மரணத்தை ஏற்பதைத் தவிர வேறு வழி இல்லையா?

இது இயேசுவின் மனதில் எழுந்த போராட்டம். இயேசு நூற்றுக்கு நூறு கடவுள். நூற்றுக்கு நூறு மனிதன். எனவே தான் இந்த போராட்டம், அவருக்கு ஒரு நம்பிக்கையும், ஊக்கமும் வேண்டும். தெளிவும் தெம்பும் வேண்டும். அதற்கு தான் இயேசுவின் உருமாற்றம்.

இயேசு தம் சீடர்களுக்கு தம் மரணத்தைக் குறித்து பல முறை முன்னறிவித்தார். ஒரு நல்ல சீடனுக்குரிய வழி சிலுவை வழியே. இதை சீடர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அதை ஏற்றுக்கொள்கின்ற மனபக்குவம் அவர்களுக்கு இருக்கவில்லை. சிலுவை அவர்களுக்கு பெரிய இடறலாக இருந்தது. எனவே சிலுவையின் இடறலை நீக்கி தமது மாட்சியை வெளிப்படுத்தவே இயேசு உருமாறினார். துன்புறும் மெசியாவே மகிமையின் மெசியா என்பதை உணர்த்தினார். மெசியா தாம் மாட்சி அடைவதற்கு முன் அத்துன்பங்களைப் படவேண்டுமல்லவா. (புனித லூக்கா 2426)

இயேசு தம் மகிமையை சீடர்கள் மூவருக்கு மட்டுமே காண்பித்தார். புனித பேதுரு, யாக்கோபு, யோவான். பேதுரு சிலுவையை வெறுத்தார். யாக்கோவும் யோவானும் அதிகார இருக்கையில் அமர விரும்பியவர்கள். இவர்களுக்கு இயேசு சிலுவையின் நிபந்தனைகளுக்கு பின்னரே மகிமை வெளிப்படும் என்ற உண்மையை வெளிப்படுத்தினார். இதற்கே இந்த உருமாற்றம்.

ஆகவே நாமும் இயேசுவின் மகிமையில் பங்குபெற நாம் மலையிலிருந்து கீழே இறங்கி வரவேண்டும். அதாவது எதார்த்த வாழ்க்கைக்கு வர வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்கள், பாடுகள், துன்பங்களை ஏற்க வேண்டும். இயேசு எல்லாவற்றையும் தந்தையின் திருவுழப்படி செயல்படுத்த விட்டுவிட்டதுபோல் நாமும் எமது வாழ்வையும் தந்தைக்கு கையளித்து உமது விருப்பத்தின் படியே ஆகட்டும் என அவரின் திருவுளத்திற்கு நம்மை கையளித்து வாழ்ந்தால் இயேசுவின் உருமாற்றம் நம் வாழ்க்கையை மாற்றும்.



475வது ஆண்டு நிறைவில்...

# மன்னார் மறைசாட்சிகள்

10

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

### சரித்திர வரலாறு

### 2.6. சரித்திர நிகழ்வு இடம்பெற்ற இடமும் அங்கு வாழ்ந்த மக்களும்

தலைவேறு உடல்வேறாக அவை கண்டு பிடிக்கப்பட்டன. அதற்கு அப்பாலும் அநேக எலுப்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. (Schurharmer: 1977: 472)

எனவே பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களையும் அன்ரனைனஸ் அடிகளாரின் அகழ்வாராட்சியையும் முன்வைத்து அத்துடன் மூல நூல்களான அருட்பணி அன்றிக் அன்றிக்கஸ், புனித பிரான்சீஸ் சவேரியாரின் கடிதங்களையும் அடிப்படையாகக் கொண்டு மன்னார் வேதசாட்சிகள் மரித்த இடம் பட்டித்தோட்டம் எனக் கருதலாம்.

### 2.7. பட்டி அல்லது பட்டிம் அல்லது கரையாபட்டாவோ அமைந்துள்ள இடம்

1560 இல் அன்றிக் அன்றிக்கஸ் அடிகளார் மன்னார்த்தீவில் இந்தியாவிலிருந்து சில பரதவரையும் கடையரையும் குடியேற்றிய பின் கரையாபட்டாவோ எது என சுட்டிக்காட்டுகின்றார்.

1. மன்னார்த்தீவு கொன்சன்ரினோ டி பிரகான்ஸ்கா என்பவரால் 1560 கைப்பற்றப்பட்ட பின் தீவின் வடகிழக்கில் அமைந்துள்ள பெரியகரையார் கிராமத்தில் 1561 இல் கரையார் குடியேற்றப்பட்டனர். அவ்விடம் தற்போது எருக்கலம்பிட்டி என அழைக்கப்படுகின்றது.

2. தோட்டவெளி என்னும் இடம் மன்னார்த்தீவின் தென்கிழக்கில் அமைந்துள்ளது.

3. பட்டிம் அல்லது படிக்காடு தோட்டவெளிப் பங்கின் எல்லைக்குள் அமைந்துள்ளது. இது மன்னார் கோட்டையிலிருந்து அரை லீக் அல்லது வடமேற்கில் 2 அல்லது 3 மைல் தொலைவில் அமைந்துள்ளது. நாங்கள் மன்னார் தீவுக்கு வருமுன் கரையார் இங்கு இருந்திருக்கின்றார்கள். இங்கு வாழ்ந்த கரையாரே 1544 இல் கிறிஸ்தவர்களானார்கள். (Schurharmer: 1977: 448) . படிக்காடு என பெயர் வந்ததற்குக் காரணம் சங்கிலியனின் கலாபனையால் தப்பியோடியவர்கள் அவ்விடம் காடாய் கிடந்ததைக் கண்டனர். அதனால் அவ்விடத்தைப் படிக்காடு என அழைத்தனர். அன்றிக் அனிறிக்கஸ் அடிகளார் சிறிய கரையார் பட்டணத்தையே கரையாபட்டாவோ என அழைக்கின்றார். ஆகவே புனித பிரான்சீஸ் சவேரியார் குறிப்பிட்ட கரையாபட்டாவோ பட்டித்தோட்டமாகும்.

4. இன்று மன்னார் நகரத்தில் சத்தோச என்ற கட்டடம் அமைந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் அமெரிக்காவில் காபன் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அவை 1477 - 1597 இடைப்பட்ட காலம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கரையாபட்டாவோ என்ற பட்டணம் இப்போது இருக்கும் மன்னார் நகரத்தையும் உள்ளடக்கியதாகவே இருந்திருக்க வேண்டும். இது பற்றிய ஆய்வுகள் இனிவருகின்ற காலங்களில் மேற்கொள்வது மன்னார் மறைசாட்சிகளின் உண்மை நிலைகளை உறுதிப்படுத்த ஓர் அகழ்வாராட்சி சாட்சியமாக அமையும் என்பது உறுதி.

### 3.6 மன்னார்த்தீவில் வேதசாட்சிகளாக மரித்தவர்கள்

மூல நூல்களான புனித சவேரியாரின் கடிதங்கள், அன்றிக் அன்றிக்கஸ் அடிகளாரின் கடிதங்கள் மற்றும் போத்துக்கேய வரலாற்று அறிஞர்களின் நூல்களிலோ தனிப்பட்ட பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 1594 இல் குவாறஸ் என்பவர் இரு நபர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றார். ஒன்று திருத்தொண்டர் பிரான்சீஸ் சவேரியார். மற்றையது உறசிங்க அதாவது இளஞ்சிங்க என்பவராகும்

கலாநிதி பொன்ஜின் என்பவர் லயோன்ஸ் கத்தோலிக்க மறைபரப்பு (Missions Catholiques ol Leons) என்ற நூலில் பாரம்பரியமாகப் பேசப்பட்டு வந்த சாந்தக் குரூஸ் என்னும் நபரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். ˙.(Antoninus: 1944:8) இந்நபரின் காரணத்தால் தான் மன்னார்த்தீவிலுள்ள சவக்காலைக்கு சாந்தக்குருஸ் சவக்காலை எனப் பெயர் வந்ததாக பலர் தெரிவிக்கின்றனர். அத்துடன் இந்நபரை முன்வைத்தே மன்னார்த்தீவுசாந்தக்குரூஸ்தீவு என அழைக்கப்படுவதாக சுவாமி ஞானப்பிரகாசர் கூறுகின்றார். (Gnanapragasar: 1924: 45)

இவ்வாறு சில தனிநபர்களின் பெயர்கள் பல ஆண்டுகளின் பின்னர் குறிப்பிடப்பட்டிருப்பதாலும் கரையார் என்று குழுமத்தினரின் பெயர் பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே் கரையாரோடு பெயர் குறிப்பிடப்பட்ட இவர்களும் வேதசாட்சிகளாக மரித்தனர் எனலாம்.

இது இவ்வாறு இருக்க அன்று லோப்பஸ் அடிகளார், சுவாமி ஞானப்பிரகாசர், யோன் கென்றி மாட்டின், காசிச்செட்டி முதலியார், றோபேட் கூக், இராஜநாயகம் முதலியார், பேணியோலா போன்றோர், வேதசாட்சிகளாக மரித்தவர்கள் கடையர் எனக் கூறுகின்றனர். (Gnanapragasar: 1924: 39-46)

சில வரலாற்று அறிஞர்கள் குறிப்பாக சுவாமி ஞானப்பிரகாசர், ரெனன்ற், அன்ரன் மத்தாயஸ் போன்றோர் வேதசாட்சிகளாக மன்னார்த்தீவில் மரித்தவர்கள் பரதவர் என்றும் கூறுகின்றனர். சில வரலாற்று அறிஞர்களான சுறாமர், யோசவ் கொஸ்ரிலோ, எஸ். .ஜி. பெறேறா, அன்ரனைனஸ் அடிகளார் போன்றோர் அன்றிக் அன்றிக்கஸ் அடிகளாரின் கடிதங்களை ஆதாரமாகக் கொண்டு கரையார் என்ற சமூகத்தவர்களே வேதசாட்சிகளாக மரித்தனர் என்று

தொடரும்.....

# அர்மீனியாவின் நாற்பது மறைசாட்சிகள் மார்ச் 10

**உங்களை யாரும் நெறிதவறச் செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்**

(புனித மத் 24:04)

பேரரசர் லிசினுஸ் காலத்தில் அர்மீனியாவில், பல நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் ஒரே இராணுவத்தின் பல்வேறு படையணிகளாக நிறுத்தப்பட்டிருந்தார்கள். லிசினுஸ் கொடுங்கோலர். கிறிஸ்தவர்கள் என்று கேள்விப்பட்டாலே அவர்களைத் துன்புறுத்தி இன்பம் காண்பவர்.

லிசினுஸ் இராணுவத்தின் 12ஆம் படையணி செபஸ்தே என்னும் இடத்தில் தங்கியிருந்தது. லிசியாஸ் என்பவன் அதன் தலைவராக இருந்தான். அக்ரிகோலா என்பவன் ஆளுநனாக இருந்தான். இந்தப் படையணியில் கிறிஸ்தவ அன்பு மறையைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். என்ற தகவல் பேரரசருக்குக் கிடைத்தது. உடனே கட்டளை பறந்தது. பேரரசரின் கட்டளை ஏற்ற ஆளுநன், உரத்தக் குரலில் **துணிச்சல் இருந்தால் கிறிஸ்தவர்களாக இக்கிறவர்கள் என் முன் வந்து நில்லுங்கள்** என்று கத்தினான். திடகார்த்திரமான 40 இளைஞர்கள் தைரியமாக முன்னே வந்து நின்றார்கள்.

> **இனிப்பு நிறைந்த ஆசை வார்த்தைக்கு மயங்காது உண்மையுடனும், நேர்மையுடனும் உழைத்து முன்னேறுகிறவர்களே இறைவனின் செல்லப் பிள்ளைகளாவர்.**

கொதித்தெழுந்த ஆளுநன், கிறிஸ்தவத்தை மறுத்து தமது தெய்வங்களுக்கு பலி செலுத்தக் கட்டளையிட்டான். **நாங்கள் கிறிஸ்தவர்கள்** என்று மீண்டும் உரக்கக் கூறி இளைஞர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். மற்ற வீரர்களும் இந்தத் துணிச்சல் பெற்றுவிடக்கூடாதே என்று நினைத்த நீதிபதி மெல்ல அன்பாகப் பேசினார். கிறிஸ்துவை மறுதலித்தால் பெரிய பதவிகள் தருவதாக வாக்குறுதி அளித்தார். அதற்கும் 40 பேரும் அசையவில்லை. உடனே, கோபத்தை வெளிப்படுத்தி உங்களைக் கொடுமைப்படுத்தி கொலை செய்வோம் என்றார். அதற்கும் அவர்கள் அஞ்சவில்லை.

நீதிபதியின் உத்தரவின்படி 40 பேரையும் சாட்டையால் அடித்தார்கள். சாட்டையின் நுனியில் இரும்பு ஊசிகள் இருந்ததால் அவை குத்திக் கிழித்தன. சங்கிலிகளால் அவர்களைப் பிணைத்து சிறையில் தள்ளினார்கள்.

தலைவர் லிசியாஸ் வந்து விசாரித்தார். அவர்கள் அனைவரின் பதிலால் தான் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக உணர்ந்த லிசியாஸ் கொடூர தண்டனை வழங்கினான். அர்மீனியாவில் மார்ச் மாதத்தில் அதிதீவிர குளிர் வாட்டும். தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகும். நகரில் உறைந்து கிடக்கும் ஒரு குளத்தில் இவர்களை நிர்வாணமாக படுக்க வைக்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினான். இதைக் கேட்டாவது மனம் மாறுவார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். அனைவரும் மகிழ்ந்து ஓடி தங்களது ஆடைகளைத் தாங்களே அவிழ்த்துவிட்டு குளத்தில் சென்று படுத்தார்கள். ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள்.

அருகிலேயே வெந்நீர் நிரப்பி ஓர் இடத்தை தயார் செய்தார்கள். பனிக்கட்டியால் உடல் எரிவதைத் தாங்க முடியாதவர்கள் கிறிஸ்துவை மறுதலித்துவிட்டு இங்கு வந்து குளிக்கலாம் என்றார்கள். யாரும் செல்லவில்லை. நேரம் ஆக ஆக தாங்க முடியாத ஒருவர் மட்டும் எழுந்து சென்று வெந்நீரில் குளித்தார். உடனே அவர் மாயமாய் மறைந்து விட்டார். அதே வேளை ஆண்டவரின் தூதர் 39 பேருடன் சேர்ந்தார். இப்போது மீண்டும் எண்ணிக்கை 40 ஆனது.

அதிகாலை ஆனது. ஆளுநன் வந்து பார்த்தான். குளத்தில் குளிரினால் இருவர் இறந்திருந்தார்கள். மற்றவர்கள் இன்னும் மகிழ்வுடன் பாடிக்கொண்டிருந்தார்கள். உடனே அனைவரையும் தீயிட்டு பொசுக்குமாறு ஆணையிட்டான். அதன்படி மற்றவர்களை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் ஒருவர் சாகுந்தருவாயில் இருந்தார். உடனே காவலர்கள் நீ மனம் மாறு! தப்பித்துக்கொள்ளலாம். என்றார்கள். அங்கு நின்று கொண்டிருந்த அந்த வீரனின் **தாய் போ மகனே போ மகிழ்ச்சியோடு உனது தோழர்களுடன் உனது பயணத்தைத் தொடர்ந்து செல்** என்று ஊக்கப்படுத்தினார். ஆளுநரின் கட்டளைப்படியே எல்லாரையும் சேர்த்து நெருப்பு வைத்தார்கள். இவர்களின் உடல் கருகி கீழே விழுந்தது. இந்த மறைசாட்சியம் 320ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஆனால் இன்றுவரை இவர்களது ஆன்ம பலம் எல்லாருடைய மனங்களிலும் நிறைந்திருக்கிறது.

05



# கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல வரலாறு

1834ம் ஆண்டு ஜுன் மாதம் 01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருமுதல்வர் அருட் தந்தை கைத்தான் அந்தோனியோ அடிகளாரால் புதிய அந்தோனியார் சுரூபமும் ஆலயமும் அபிஷேகம் செய்யப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. அவ்வேளை தூய அந்தோனியாரின் திருப்பண்டம் (உடலின் சிறுபகுதி) கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டு ஆலய நுழை வாயிலுக்கு அருகில் இருக்கும் தூய அந்தோனியாரின் திருச்சுரூபத்துடன் வைக்கப்பட்டது.

அவ்வேளை இத்திருத்தலம் கொட்டாஞ்சேனை தூய லூசியாள் பேராலயத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. எனவே மூப்பர், அண்ணாவியார் ஆகியோரின் பணி இத்திருத்தலத்தில் முக்கியமாகத் தேவைப்பட்டது. அண்ணாவியார் செப வழிபாடுகளை நடத்துவதிலும், மூப்பர் ஆலய விழாக்களை ஏற்பாடு செய்வதிலும், தம் பொறுப்புக்களை நிறைவேற்றினர்.

1892ம் ஆண்டு கொழும்பு மறைமாவட்டத்தின் முதலாவது பேராயர், அதிமேதகு கிறிஸ்தோப்பர் பொன்ஜின் ஆண்டகை இறந்தபின் அவரது உடல் தற்போதைய பீடத்திற்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதனை இன்றும் பீடத்திற்கு முன்பாகக் காணலாம்.



1912ஆம் ஆண்டு இலங்கையில் ஆங்கிலேயரின் காலனித்துவ நிர்வாக அதிகாரியாக இருந்த சேர் கென்றி எட்வட் மெல்கலம் துறைமுகப் புகையிரதப் பாதையை அமைக்கும் நோக்கத்துடன்தூய அந்தோனியார் ஆலயத்தை நிர்மூலமாக்கத் திட்டமிட்டார். இதற்கு கத்தோலிக்க மக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புக்கள் பல எழுந்தன. எனவே இதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது குறித்து அலசி ஆராய்ந்த அக்குழு மூன்று காரணங்களை முன்வைத்து அவ்வாலயத்தை நிர்மூலமாக்க முடியாதென்று சிபாரிசு செய்தது. முதலாவது தூய அந்தோனியார் உலக கத்தோலிக்க மக்களின் போற்றுதலுக்கு பெயர் போனவர். அதேபோன்று கொச்சிக்கடை தூய அந்தோனியார் ஆலயம் தொடக்கம் முதல் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. இரண்டாவது, ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும், பெருமளவில் இன, மத, மொழி பேதமின்றி மக்கள் இவ்வாலயத்துக்கு வந்து செல்கின்றனர். மூன்றாவது இங்கு கிடைக்கும் பணம் ஆயர் இல்லத்தினூடாகப் பராமரிக்கப்படும் ஏழைச் சிறுவர்களின் கல்விக்கு உதவுகின்றது. இதனால் இத்திருத்தலம் அப்படியே இருக்கத் தக்கதாகப் புகையிரதப் பாதை ஆலயத்தின் பின்புறமாக அமைக்கப்பட்டது. 1936ம் ஆண்டு தூய சூசையப்பர் கல்லூரியில் களியாட்டக் காட்சியும் கானிவேலும் நடத்தப்பட்டு சேகரிக்கப்பட்ட பணத்தில் பாடகர் குழுவிற்கான மேற்பக்க கலரியும், திருத்தல இரண்டு பக்க முகப்புக்களும், குருவானர் பணிமனையும் கட்டப்பட்டன. பேராயர் மெலிசன் ஆண்டகையினால் இவை 1940ல் ஆசீர்வதிக்கப்பட்டது. இவர்களில் பெரும் பாலானோர் பயத்தினால் இவ்வாலய வட்டாரத்தை விட்டு விட்டுத் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறத் தொடங்கினர். எனவே தான் கூடுதலாக இருந்த ஒரு இனம் வெளியேறி இரு இனங்களையும் சார்ந்த மக்கள் சரிசமமான தொகையாக இப்பகுதியில் வாழுவதற்குக் காரணமாக அமைந்தது. 1951ம் ஆண்டில் புதிய பீடம் கொழும்பு பேராயர் கருதினால் தோமஸ் கூரே ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டது. 1965ம் ஆண்டு முதல் திருச்சுரூபப் பவனியின் போது திருச்சுரூபத்தை ஆட்கள் சுமந்து செல்லும் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டு வாகனத்தில் வைத்து கொண்டு செல்வது ஆரம்பமானது. அத்துடன் கடற்படையினர் திருச்சுரூபப் பவனியின்போது பாதுகாப்பு மரியாதையும் வழங்குவதற்காக திருச்சுரூபத்தைச் சுற்றி அணிவகுத்துச் செல்லத் தொடங்கினர்.

இவ்வாறு தூய அந்தோனியாரின் திருச்சுரூபம் அலங்கரிக்கப்பட்டு தூய லூசியாள் பேராலயத்திலிருந்து திருத்தலத்தை நோக்கிச் சுற்றுப் பிரகாரமாக வரும்போது ஒரு தடவை ஹெட்டியாவத்தை சந்தியில் வைத்துச் சுற்றுபிரகார வாகனம் தீப்பற்றி எரிந்தது. அது உடனடியாக தண்ணீர் ஊற்றி அணைக்கப்பட்டதும் ஒரு அற்புதம் எனலாம்.

தூய லூசியாள் பேராலயத்திலிருந்து சுற்றுப் பிரகாரத்திற்காக திருச்சுரூபம் அலங்கரிக்கப்பட்டு இங்கு கொண்டு வருவதற்குக் காரணம் இங்கு சோடினை செய்வதற்குரிய இடவசதி இல்லை. எனவே பொது இடத்தில் வைத்துச் சோதனை செய்வதை விட பேராலயம் ஆசனக் கோவிலாக இருந்தபடியால் அங்கு வந்து சோடினை செய்வது சிறந்ததாகக் கருதப்பட்டது. இந்த நடைமுறை இன்றுவரை இடம்பெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். இன்னொரு தடவை பாஸ்கா வழிபாட்டின் பொழுது பீடத்திலிருந்த மெழுகுதிரி எரிந்து அந்தோனியாரின் திருச்சுரூபக் கூடு முற்றாக எரிந்த போதும் தூய அந்தோனியார் திருச்சுரூபத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வில்லை. இதன் பிற்பாடு இத்திருச்சுரூபம் பேராலயத்திற்கு அலங்கரிப்பதற்காக கொண்டு செல்லப்படுவது இல்லை.

தொடரும்

சென்ற இதழ் தொடர்ச்சி...

# நீரிழிவு நோய்



மாதிரியான பரிசோதனையாக இருந்தாலும் அது மருத்துவரின் ஆலோசனையோடு மட்டுமே இருக்க வேண்டும். அந்தப் பரிசோதனை முடிவைத் தெரிந்து நீங்களே சுயமாக மாத்திரைகளை அதிகப்படுத்திக், கொள்வதோ குறைத்து எடுத்துக் கொள்வதோ விபரீதமாக முடிந்துவிடும் என்பதால் நீரிழிவு உறுதிப்படுத்தப்பட்ட முதல் மருத்துவரது கண்காணிப்பில் உரிய இடைவெளியில் பரிசோதனை செய்து-கொள்வது பல்வேறு ஆபத்துகளிலிருந்து உங்களைக் காக்கும். எப்போதும் சொல்வதுதான், ***வரும் முன் காப்போம்*** என்பது போல் தீராத நோயை வரவழைத்துக் கொண்டு அவதிப்படுவதை வாழ்க்கை முறையிலும் உணவுக் கட்டுப்பாட்டிலும் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து ஆரோக்கியமாய் வாழ்வோம்.

***உலக சர்க்கரை நோய்தினம்***

உலக அளவில் மக்கள் அதிக அளவில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவதை உணர்ந்து உலக சுகாதார நிறுவனமும், இன்டர்நேசனல் டயபெடிக் பெடரேசனும் இணைந்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த உலக நீரிழிவு தினத்தை 1991இல் அறிவித்தது. இது 2006 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ ஐக்கிய நாடுகளின் தினமாக மாறியது. இன்சுலினை கண்டுபிடித்த சர்பிரடெரிக் பாண்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினமாகும். தாய், தந்தையருக்கு சர்க்கரை நோய் இருந்தால் வாரிசுகளுக்கும் வர வாய்ப்பு அதிகம். நோயைப் பற்றி அறியாமையால் குடும்பத்தில் உள்ளவர்கள் சர்க்கரை நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இதனால் குடும்ப பொருளாதாரம் மருத்துவ செலவுக்கே போய்விடுகிறது. முறையாகச் சிகிச்சை பெறமுடியாமல் சர்க்கரை நோயின் பின் விளைவுகளுக்கு ஆளாகிறார்கள். தற்போது உலக அளவில் 422 மில்லியன் பேர் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் வரும் காலங்களில் 642 மில்லியனாக உயரும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. சர்க்கரை நோய் என்றால் என்ன? கணையத்தில் இருந்து உற்பத்தியாகும் இன்சுலின் என்ற என்சைம் நம் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைச் சமநிலையில் கட்டுப்படுத்தக்கூடிய செயலைச் செய்கிறது. இந்த இன்சுலின் அளவு குறைந்தாலோ அல்லது சுரக்கவில்லை என்றாலோ இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகிறது. இதப் பாதிப்பபைத்தான் நீரிழிவு அல்லது சர்க்கரை நோய் என்கிறோம். சர்க்கரை நோய் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக, குடும்பத்தில் பரம்பரையாக சர்க்கரை நோய் உள்ளவர்கள் இடுப்பு அளவு அதிகமாக இருப்பவர்கள், அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள், உடல் உழைப்பு இல்லாதவர்கள் இந்தநோயால் பாதிக்கப்படுவர்.

தொடரும்

## 01 தேசிய மறைக்கல்வி...

**2019 மறையாசிரியர் இறுதித் தேர்வில் (எழுத்து தேர்வு) சித்தி பெற்ற மறையாசிரியர்களுக்கு**

மேற்படி எழுத்துத் தேர்வில் சித்திப் பெற்றவர்கள் அதன் அடுத்த கட்டமான ஆய்வு கட்டுரை எழுதுவதற்காக அவர்களுக்கான ஆய்வு கட்டுரைத் தலைப்புகளை கட்டுரை எழுதப்பட வேண்டிய அறிவுறுத்தல்களோடு ஏற்கனவே அனுப்பி விட்டோம். உங்களின் கட்டுரைகள் இவ்வருடம் வைகாசி 15ம் திகதி முன்னர் உங்கள் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். அவை உங்கள் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் மூலம் எமக்கு சமர்ப்பிக்கப்படும். ஆகவே இறுதி தேர்வு எழுத்து பரீட்சையில் சித்தி பெற்று இதுவரை ஆய்வு கட்டுரை தலைப்புகள் கிடைக்கப்பெறாத மறையாசிரியர்கள் எம்மைத் தொடர்புக் கொள்ளவும்.

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை, தமிழ்ப் பிரிவு பொறுப்பாளர்.**
**தொ. பே. எண்:- 0112685459**

## 10 விவிலிய வினா விடை

188. செல்வர் (10?23)
189. இயேசு சீடர்களிடம் (10:25)
190. பின் யார் தாம் மீட்புப் பெறமுடியும் (10:26)
191. இயேசு, சீடரிடம் (10:27)
192. பாரும் றாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே என்று சொன்னார் (10:28)
193. செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் (10:35-37)
194. யாருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவாக்ள் (10:40)
195. தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் (10:45)
196. எரிகோவை விட்டு வெளியே செல்லும்போது (10:46)
197. திமேயு (10:46)

## 02 பாஸ்கு...

இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் பாஸ்கு குண்டு தாக்குதல் பற்றி ஆராய ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவுக்கு பொறுப்புக் கொடுத்துவிட்டு சும்மா இருக்க முடியாது. பாதுகாப்பு அமைப்பு, வேறு பொறுக்குக் கூற வேண்டிய அமைப்புகளையும் அழைத்து இதைப்பற்றிய மிகுந்த ஆர்வத்துடன் விசாரிக்க வேண்டும். அரசியல் மேடைகளில் வாக்குறுதிகொடுத்தால் மாத்திரம் போதாது. செயல்படுத்தவும், செயல்படுவதை மக்கள் அறியவும் செய்ய வேண்டும். ஆளும் கட்சியிடம் நாம் மீண்டும் மீண்டும் சொல்வது தான் பாஸ்கு தாக்குதலை முன்கொண்ட எமது கேள்விகளுக்கு செவி சாய்த்து முழுமையான விசாரணை நடத்தி உண்மையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துமாறு. இந்த ஊடக சந்திப்பில் பேராயருடன் பொதுமக்கள் தொடர்பு இயக்குனர் அருட் பணி ஜுட் கிறிசாந்த அடிகளாரும் பேராயரின் சட்ட ஆலோசகர் ஷமல் பெரேரா அவர்களும் கலந்துக் கொண்டார்கள். பாஸ்கு தாக்குதலின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்ட நிகழ்ச்சி நிரல் பேராயரால் ஊடக சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்டது.

**தகவல் : T. சுனில்**

## 02 கிறிஸ்தவ அர்ப்பணிப்பு...

கிறிஸ்தவ சீடத்துவம் இன்னுமொரு கிறிஸ்துவாக இந்த உலகில் மாற்றம் பெறுவதற்கும் தூய பவுலடிகளார் இதனை பின்வருமாறு கூறுகின்றார். "... கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்" (கலா 3:27), "எனவே, இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கின்றார்...." (கலா 2:20) எனவே, கிறிஸ்துவின் சீடர்கள் அவராக அவருக்குள் அன்பில் வாழ, எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி, எந்தவித எதிர்பார்ப்புமின்றி, விசுவாசத்தில், அன்பில் மற்றும் அர்ப்பணிப்பில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

எனவே, உங்கள் ஆயனாக, உங்கள் நலனில் அக்கறைக் கொண்டவனாக நான் கேட்டுக்கொள்வது யாதெனில், உங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின் மீது மட்டும் வையுங்கள். உங்கள் விசுவாசத்தை சுயநலக்காரர்களின் வளத்திற்காக வீணாக்காதீர்கள். கத்தோலிக்கத் திருச்சபை உங்கள் உழைப்பில் பத்திலொருப் பங்கை உங்களிடம் கேட்பதில்லை. கத்தோலிக்கத் திருச்சபை உங்களுக்காக தன்னையே அர்ப்பணித்து உங்களை கடவுளின் மறைப்பொருளில் உங்களை கண்திறக்கச் செய்கின்றது. நீங்கள் கடவுளில் மட்டும் விசுவாசம் கொள்ள வேண்டுமென்று நான் ஆசிக்கின்றேன். அவரிடம் மட்டும் மன்றாடுங்கள். அவரின் வார்த்தைகளை மட்டும் கேளுங்கள். அப்போது தான் அவர் உங்களை ஆசீர்வதித்து அவரது பராமரிப்பில் வைத்துக் காப்பார்.

"கவனமாயிருங்கள், விழிப்பாயிருங்கள்..." (மத் 13:33) என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் தீயவன் இயேசு கிறிஸ்துவையே சோதித்தார். அவனை வணங்கினால் அனைத்தையும் தருவேன் என்று கூறினான் (லூக் 4:5) எனவே, எதற்காகவும் உங்கள் விசுவாசத்தை வீணாக்காதீர்கள் ஆண்டவர் தாமே உங்களை பாதுகாத்து, திடப்படுத்தி, அவருடன் நடக்க, தீயவன் உங்களை தீண்டாதிருக்க ஆசீர்வதிப்பாராக.

**இயேசு கிறிஸ்துவுக்குள்ளும், மாசற்ற மரியாவுக்குள்ளுமான உங்கள் சகோதரன்**

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**

**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்**

**14. மாசி 2020**

## 05 மறையாசிரியரும்...

நாளைய தலைமுறைக்கு சிறந்த ஒரு குருவானவரையோ அருட்கன்னியரையோ, விசுவாசமுள்ள குடும்பத் தலைவர்களையோ நாட்டுக்கு உருவாக்கித் தரும் பங்கானது மறையாசிரியர்களையே சார்ந்துள்ளது என்றும், விழிப்புடனும், கடமையுடனும் செயற்பட வேண்டிய பொறுப்பு நிறைந்தவர்கள் என்றும், சீடத்துவம் நிறைந்த சிறப்பான பணியென்றும் மேலும் பல அறிவுரைகளுடன் தியானத்தை நற்கருணை ஆசீருடன் நிறைவு செய்தார்.

**தகவல் : செல்வராணி ஜோர்ஜ், கொழும்பு 15.**

## 04 இளைஞரே!....

நாம் ஊதாரி மைந்தன் போலத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதோ, நம் தந்தையிடம் திரும்பி வருவோம, நம்மை நாம் பொறுமையுடன் மாற்றிக் கொள்வதில் முன்வருவோம். அப்போது இறைவனின் மன்னிப்பும், இரக்கமும் நம்மேல் இறங்கும். மனம்மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகச் செய்வோம். அதன் வழியாக இறையருள் நிறைவாய் பெற்று வளர்வோம். 'உன்னைப் படைத்தவரை உன் இளமைப்பருவத்தில் மறவாதே. (சஉ 12: 1)

## 09 அவர்கள்...

**2. விஷேட நிகழ்ச்சிகள்**

(அ) சித்திரை 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (இறை இரக்க ஞாயிறன்று அந்த துர்பாக்கியமான சம்பவத்தில் உயிர் இழந்தவர்கள் மற்றும் காயமடைந்து வீர பக்தர்களுக்காக பேராயரின் தலைமையில் கொழும்பு 10, தூய ஜோசப் கல்லூரி கேட்போர்கூடத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திரு. பிரான்சிஸ் அல்மேதா திருமதி. சவுந்தரி டேவிட் ரொட்ரிகோ ஆகியோரால் வழிநடத்தப்படும் பாடசாலைகள் மற்றும் மறைமாவட்ட பாடகர் குழாம் குழுக்கள், பிரபல இசையமைப்பாளர்களால் எழுதப்பட்ட லத்தீன் பாடல்களின் உதவியோடு இந்த நிகழ்வு இடம்பெறும்.

(ஆ) சித்திரை 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொரெல்ல கல்லறைத் தோட்டத்தில் மாலை 4.00 மணிக்கும், மாதம்பிட்டி கல்லறைத் தோட்டத்திலும் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தூய செபஸ்தியார் ஆலயத்திலும் திருவிழிப்பு செபம் இரவு 8.45 மணிக்கு ஆரம்பமாகும். கட்டுவாப்பிட்டி திருவிழிப்பு வழிபாடு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் பங்கேற்பில் நடைப்பெறும்.

கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல இரவு வழிபாடானது கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு மெஸ்வெல் சில்வா ஆண்டகை மற்றும் மேதகு ஜெ. டி. அந்தனி ஆண்டகை ஆகியோரின் பங்கேற்பில் இரவு 8.45மணிக்கு ஆரம்பமாகும். இரவு முழுவதும் செபவழிபாடுகள் நடைப்பெறும்.

**(இ)நினைவுகூரும் நிகழ்வுகள்**

சித்திரை மாதம் 21ம் திகதி செவ்வாய்கிழமை கொச்சிக்கடை மற்றும் கட்டுவாப்பிட்டியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படுவதோடு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தலத்தில் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையிலும், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி தூய செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெறும் நிகழ்வுகள், துணை ஆயர்களான மேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை மற்றும் மேதகு ஜெ. டி. அந்தனி ஆண்டகை ஆகியோரின் தலைமையிலும் நடைபெறும்.

இதற்கமைய நிகழ்ச்சிகள் பின்வருமாறு நடாத்தப்பட்டும்.

**பாஸ்கா ஞாயிறு இடம்பெற்ற குண்டு தாக்குதலில் இறந்தவர்களை நினைவுகூரும் விசேட நிகழ்ச்சி நிரல்**

காலை 8.40 முன்னுரை

காலை 8.45 நாடு முழுவதும் 2 நிமிட மௌன அஞ்சலி.

காலை 8.45 ஆலய மணிகள் முழங்கப்படல் மெழுகுவர்த்தி ஏற்றப்படல்

(திருமதி.நந்தா மாலனி அவர்களால் ) நினைவுப் பாடல் பாடப்படும்.

**கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருப்பலிகள் நடைப்பெறும் கொச்சிக்கடை திருத்தலத்தில்**

காலை 9.00மணிக்கு வறிய மக்களுக்கு உணவு வழங்க ஆலயத்தின் அருகே அமைக்கப்பட்டுள்ள உணவகம் திறந்துவைக்கப்படல்

காலை 9.15 க்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**கட்டுவாப்பிட்டி ஆலயத்தில்**

காலை 9.00மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு மெஸ்வல் சில்வா ஆண்டகை மற்றும் மேதகு ஜெ. டி. அந்தனி ஆண்டகை ஆகியோரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

காலை 11.00க்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 05.00மணிக்கு குண்டு தாக்குதலில் இறந்துபோன விசுவாசிகளை அடக்கம் செய்துள்ள புதிய கல்லறைத் தோட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள விஷேட தேவாலயமானது பேராயர் ஆண்டகை மற்றும் துணை ஆயர்கள் ஆகியோரால் அர்ச்சிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**மறைசாட்சிகள்**

பாஸ்கா ஞாயிறு தீவிரவாத குண்டு தாக்குதலில் இறந்து போன அனைத்து விசுவாசிகளையும் நினைவுகூருமாறும், பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்காக செபிக்குமாறும் காயமடைந்து இன்னும் துன்புறுவோர்களுக்காக செபிக்குமாறும் உணர்வு பூர்வமான உள்ளம் கொண்ட அனைவருக்கும் அழைப்புவிடுகின்றோம். அவர்கள் அன்று பாஸ்கா ஞாயிறன்று இயேசு கிறிஸ்து தனது வாழ்வை புதுப்பித்துக்கொண்ட சிலுவை மரணத்தின் வெற்றியின் உயிர்ப்பின் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையினால் ஆலயங்களுக்கு சென்றிருந்தார்கள்.திருச்சிலுவையின் வழியாக இயேசு கிறிஸ்து அவர்களுக்கு கொடுத்த எதிர்நோக்கு மற்றும் மகிழ்ச்சியை நினைவுகூர்ந்து அவருக்கு மிக உயர்ந்த மகிமை கொண்டு சேர்க்கும் ஆசையின் நிமித்தம் அவர்கள் ஆலயத்திற்கு சென்றிருந்தார்கள் இதற்கேற்ப அவர்கள் கிறிஸ்தவ அழைப்பில் நம்பிக்கையின் வீரர்கள். அவர்கள் வாழ்வின் உயர்ந்த மகிழ்ச்சி எது என்பதை நமக்கு காண்பித்த மறைசாட்சிகள் ஆவர். "கிறிஸ்து தமது மரணத்தால் பாவத்திலிருந்து விடுப்படும் வழியை நமக்கு காண்பித்தார். நாம் வாழும் இக் காலகட்டத்தின் மறைசாட்சிகள் மற்றும் புனிதர்களாகிய அவர்களுக்காக இறைத் தந்தைக்கு நன்றிகூறுவோம். அன்றைய தினம் நீங்கள் எங்கு இருந்தாலும் சமய பேதமின்றி மெழுகுவர்த்தி ஏற்றி அவர்களை நினைத்து இரண்டு நிமிடங்கள் மௌனமாக இருந்து அஞ்சலி செலுத்துங்கள்.


2020 சித்திரை மாதம் 21ம் திகதி காலை 8.45மணிக்கு அனைத்து பௌத்த, இந்து இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இவ்வாறான நினைவு தின நிகழ்வுகளை ஆயத்தப்படுத்துவோம். அனைத்து பழிவாங்கும் எண்ணங்கள் வன்முறை செயற்பாடுகளை இன்றைய எம் சமூகத்திலிருந்து விலக்கி அமைதியான நீதியான சமூகத்தை எமது நாட்டில் உருவாக்கும் உன்னதமான எண்ணம் கொண்டவர்களாக அனைவரும் இலங்கையர்களாக கரம்கோர்த்துக் கொள்வோம். அதற்கான தருணமாக இந்த நினைவு தின நிகழ்வை பயன்படுத்துவோம்.

**அழைப்பு**

இன, மத, மொழி பேதமின்றி சமாதானமாக சகோதரத்துவத்துடன் ஒருவரையொருவர் ஏற்று நட்புடன் சகோதரத்துவ மனநிலையுடன் செயற்பட சமாதானம் ஒற்றுமை நிறைந்த நாடாக எமது அன்பான தாய் நாட்டை மாற்றுவதற்காக, கத்தோலிக்க மக்களாகிய நாங்கள் எமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகின்றோம். இதற்காக எமது நற்பின் மற்றும் சகோதரத்துவத்தின் கரங்களை நீட்டுகின்றோம். இலங்கை வாழ் சகோதர மக்களுக்கு எல்லாம் வல்ல இறைவனின் நிறைவான ஆசீர்வாதம் கிடைக்க பிரார்த்திக்கின்றோம். ஆண்டவர் எமது நாட்டையும் எமது மக்களயும் ஆசீர்வதிப்பாராக.

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**

**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்**



## மணமகள் தேவை

RC வத்தளை, 81, 5'-3", Engineer Degree படிக்கும், QS ஆக தொழில் செய்யும் நற்குணமுள்ள மகனுக்கு நற்பண்புள்ள, சிவந்த அழகிய மணமகள் தேவை.

**தொடர்புகளுக்கு : 0775997746**

mproposals914@gmail.com

(60201)

## புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு – 13

## 2021ம் ஆண்டு – தரம் 01ற்கான விண்ணப்பப்படிவம்

**விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதிகளில் வழங்கப்படும்.**

- 2020 மார்ச் மாதம் 07ம் திகதி (சனிக்கிழமை) காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை
- 2020 மார்ச் மாதம் 14ம் திகதி (சனிக்கிழமை) காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை

**பின்வரும் சான்றிதழ்கள் அனைத்தையும் கையளிக்கும் பெற்றோர்களுக்கு மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும் என்பதை கவனத்திற்கொள்க.**

- பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி) (2015.02.01 - 2016.01.31)
- பிள்ளையின் திருமுழுக்குச் சான்றிதழ் (மூலப்பிரதி)
- திருச்சபையால் பெற்றோருக்கு வழங்கப்படும் திருமண சான்றிதழ் (மூலப்பிரதி)
- பங்குக் குடும்பப் புத்தகம்
- பெற்றோரின் தேசிய அடையான அட்டை
- வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்

(58728)

**அதிபர், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு 13.**



# சிலுவையின் பின்னால்...!! வஹாக்கோட்டை கல்வாரி புனித பூமி

தவக்காலம் - 2020

## தவக்கால நிகழ்வுகள்

- திருநீற்றுப்புதன் திருப்பலி : காலை 7.00 மணி மற்றும் மாலை 5.00 மணி
- வெள்ளிக்கிழமைகளில் : மாலை 4.00 மணிக்கு கல்வாரியில் சிலுவைப் பாதையும் திருப்பலி நடைபெறும்
- ஞாயிறு திருப்பலிகள் : காலை 7.00 மணிக்கும் காலை 10.45 மணிக்கும் ஆலயத்தில் திருப்பலி நடைபெறும்.

### பரிசுத்த வார வழிபாடுகள்

- குருத்தோலை ஞாயிறு : திருப்பலி காலை 8.00 மணிக்கு
- பெரிய வியாழன் : மாலை 5.00 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆராதனை நடைபெறும்.
- பெரிய வெள்ளிக்கிழமை : திருச்சிலுவைப்பாதை 2.00 மணிக்கும் அதனை தொடர்ந்து பாடுகளின் வழிபாடு நடைபெறும்
- அல்லேலூயா சனிக்கிழமை : நள்ளிரவு வழிபாடு 11.00 மணிக்கு
- பாஸ்கா ஞாயிறு திருப்பலி : காலை 8.00 மணி



### யாத்திரையாளர்களின் கவனத்திற்கு

- திரு யாத்திரையில் பங்குபற்றும் மக்கள் திருச்சிலுவைப் பாதையினையும் திருப்பலியையும் தாங்களே ஒழுங்குப்படுத்தலாம்.
- தங்குமிட வசதிகள் மற்றும் உணவு ஆகியன முன்னறிவித்தலின் நிமித்தம் வழங்கப்படும்.

### திருயாத்திரை தலத்திற்கு வரும் வழிகள்

கொழும்பிலிருந்து , மினுவங்கொடை வழியாக இல.5 கிரியுள்ள, குருநாகளை, வஹாக்கோட்டை
கொழும்பு 5 இருந்து, கடவத்தை, வரக்காபொலை, அலவ்வ, பொல்கஹாவெளை, குருநாகளை, கலேவெலை, வஹாக்கோட்டை
கண்டியிலிருந்து மாத்தளை - வஹாக்கோட்டை (பஸ் இலக்கம் - 584/585)
நீர்கொழும்பிலிருந்து நாரம்வல, குருநாகளை, கலேவெல, வஹாகோட்டை
அனுராதபுரத்திலிருந்து கெக்கிராவை, தம்புள்ளை, கலேவெல, வஹாக்கோட்டை.

(61793)

மேலதிக தகவல்களுக்கு: திருத்தல பங்குத்தந்தை மதிப்பிற்குரிய துஷாந்த பெரேரா (பு.ஆ.ச.) அருட்தந்தை
புனித அந்தோனியார் தேசிய திருத்தலம் வஹாக்கோட்டை
தொடர்புகளுக்கு - 0769374895 / 0773591227 / 0662289210

இறை அன்பில் மலர்ந்திட உங்களை அனைவரையும் அழைக்கின்றோம்...

உணவு சம்பந்தமான தேவைகளுக்கு தொடர்புகொள்ளவும் - பிரசாத் 076-9374895



# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927

பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com

| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்